REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜூலை 4 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 91 இல. 156 | Tuesday 04, July, 2023 | 12 பக்கங்கள் | 50/-




## பொருளாதார ரீதியாக பாதிப்புற்ற அனைத்து மக்களுக்கும் 'அஸ்வெசும'

### வழங்க அரசு நடவடிக்கை என்கிறார் வஜிர MP

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)



நாட்டில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள அனைத்து ஏழை எளிய மக்களுக்கும் 'அஸ்வெசும' நிவாரண கொடுப்பனவு வழங்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளருமான வஜிர அபேவர்தன கூறினார். இரத்தினபுரி தேர்தல் தொகுதியின் ஐ.தே.கட்சி அமைப்பாளர்

04

## அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு மக்களது பிரச்சினைகளை தீர்க்க ஒன்றுபடுங்கள்

### சஜித் தலைமையிலான எதிர்க்கட்சியினருக்கு ஜனாதிபதி பகிரங்க அழைப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசியல் நோக்கங்களை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன்வருமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச தலைமையிலான எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு விடுத்துள்ளார். போலியான தர்க்கங்களை முன்வைத்து தோல்வியைத் தழுவிக் கொள்வதற்கு

04



## ரயிலில் தினமும் டிக்கட் எடுக்காது பயணிக்கும் ஒரு இலட்சம் பேர்

### நாளொன்றுக்கு சுமார் 01 கோடி ரூபா இழப்பாகிறது



இலங்கையில் தினமும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகள் ரயிலில் பயணச்சீட்டு எடுக்காமல் பயணிப்பதாக தெரியவந்துள்ளது.

இதனால், நாள் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நட்டத்தை ரயில்வே திணைக்களம்

04

# ரூ.3000 க்கும் குறைவாக லிற்றோ GAS சிலிண்டர்




## இன்று நள்ளிரவு முதல் விலைக்குறைப்புடன் புதிய விலை அறிவிப்பு

**12.5 Kg எடைகொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை சுமார் 200 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதாக லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது**

லோரன்ஸ் செல்வநாயகம்

லிற்றோ சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் இன்று நள்ளிரவு முதல் குறைவடையவுள்ளதுடன் 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 3,000 ரூபாவுக்கு குறைவான விலையில் நுகர்வோர் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக லிற்றோ கேஸ் நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

லிற்றோ சமையல் எரிவாயுவின் விலைகள் பிரதி மாதமும் முதல் வாரத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அந்தவகையில் இன்று நள்ளிரவு முதல் புதிய விலைகள் நடைமுறைக்கு வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னர் விற்பனை செய்யப்பட்ட விலையில் இம்முறை சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விலை குறைப்பு செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

04

## 'அமரவிரு அபிமன் 32' பாராட்டு விழா



விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் அரசியல் வாழ்வில் 32 வருடங்கள் நிறைவையொட்டி ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 'அமரவிரு அபிமன் 32' பாராட்டு விழா நடைபெற்றது. அங்கு வெளியிடப்பட்ட சிறப்பிதழ் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கையளிக்கப்படுவதையும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உள்ளிட்ட முக்கியஸ்தர்களையும் படத்தில் காணலாம்.



03

இலங்கைக்கான புதிய UK தூதுவராக அன்ட்ரூ

ஆகஸ்ட 01 முதல் பதவியேற்கிறார்

### நாட்டில் உயர்கல்வியை தொடர விரும்புகின்ற

## மாணவர்களுக்கான வட்டியில்லா கடன் திட்டம் இன்று முதல் அமுல்

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



லோரன்ஸ் செல்வநாயகம்

2019, 20 மற்றும் 21ஆம் ஆண்டுகளில் உயர்தரத்தில் கல்வி கற்ற 5,000 மாணவர்களுக்கு வட்டியில்லா கடன் வழங்கும் திட்டத்துக்கான விண்ணப்பம் இன்று செவ்வாய்க்கிழமை (04) முதல் கோரப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். உரிய கடன் தொகையை பெறும் மாணவர்கள் வேலைவாய்ப்பு

04

### நாட்டிலுள்ள பதிவு செய்யப்படாத அனைத்து

## தனியார் மருத்துவ நிறுவனங்களும் செப். 15 முன் பதிவு செய்ய வேண்டும்

### சுகாதார அமைச்சின் ஒழுங்குமுறை சபை அறிவிப்பு

பதிவு செய்யப்படாத அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன் சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை சபையில் பதிவு செய்ய வேண்டும் என்று ஒழுங்குமுறை சபை அறிவித்துள்ளது. 2006 ஆம் ஆண்டின்

04

### மறுசீரமைப்புகளை முறையாக மேற்கொள்ளும் பட்சத்தில்

## இலங்கையில் முதலீடு செய்ய உலக முதலீட்டாளர்கள் தயார்

### வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



முதலீட்டுக்கு சாதகமான சூழலை உருவாக்கிக் கொடுக்கும் வகையில் மறு சீரமைப்புகளை மேற்கொள்ளும் பட்சத்தில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்கள் தயாராக இருப்பதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

04

## நாட்டில் மேலும் நான்கு டெங்கு நோயாளர் மரணம்

### நோயாளர் தொகை 50,000 ஆக பதிவு



இலங்கையில் மேலும் 4 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ள அதேவேளை, இந்த வருடத்துக்குள் மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 50 ஆயிரத்தையும் தாண்டியுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. தொற்று நோயியல் பிரிவின்படி,

04

### அஸ்வெசும நலன்புரி திட்டம்;

## மேன்முறையீட்டு குழு இந்த வாரம் கூடுகிறது

### இதுவரை 5,60,211 முறைப்பாடுகள் பதிவு

அஸ்வெசும நலன்புரி திட்டத்திற்காக பெறப்பட்ட மேன்முறையீடுகளை பரிசீலிப்பதற்காக மேன்முறையீட்டு குழு இந்தவாரம் கூடுகிறது. அதன்படி, கிடைக்கப்பெற்றுள்ள மேன்முறையீடுகள் பரிசீலிக்கப்படவுள்ளன.

04

## பாதாள உலக குழுக்களை அடக்க STF படை களத்தில்

### வீதிச்சோதனை சாவடிகள் அமைத்து தேடுதல்



மேல் மற்றும் தென் மாகாணங்களில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை அடக்குவதற்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேல் மாகாணத்தின்

04

## மூன்று மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

### தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் எச்சரிக்கை



நாட்டின் மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது. கண்டி, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை

04



02

இலங்கை சிவசேனையின் தலைவரான மறவன்புலவு சச்சியை சந்தித்த மைத்திரிபால



03

திருமலையில் இளைஞர்கள் இருவர் மீது துப்பாக்கிச்சூடு

காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதி



03

செவ்வாய் கிரகத்திலுள்ள கற்பாறைகள் இலங்கையில்

நாசா விஞ்ஞானிகள் குழு ஆய்வில் கண்டுபிடிப்பு

## மலையகத்தில் பிரமிட் முறையில் சூட்சுமமாக நிதி மோசடிகள்

### முகநூல் பயனாளர்களுக்கு பாதிக்கப்பட்டோர் எச்சரிக்கை!




நுவரெலியா, கண்டி, கேகாலை மாவட்டங்களின் பல பகுதிகளில் சட்ட விரோத பிரமிட் முறையிலான நிதி மோசடிகள் அதிகரித்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்களால் மிகவும் சூட்சுமமாக முகநூல் வழியாக இந்த மோசடி வர்த்தக

04

### கதிர்காமம் மலை விகாரை பகுதியில் வாகன விபத்து;

## எட்டுப்பேர் காயம்; அதில் இருவர் கவலைக்கிடம்




லோரன்ஸ் செல்வநாயகம்

கதிர்காமம் மலை விகாரை பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 8 பேர் காயமடைந்ததோடு அதில் இருவர் கவலைக்கிடமாகவுள்ளதாக கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர். கதிர்காமம் மலை விகாரைக்கு

04

## புத்தளத்தில் பாட்டனும் பேரனும் கடலில் மூழ்கி பலி

### நுரைச்சோலை, இளந்தையடி கடற்கரையில் அனர்த்தம்



புத்தளத்தில் குளிக்கச் சென்ற ஒரே குடும்பத்தைச்சேர்ந்த இருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ள சோக சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. புத்தளம் நுரைச்சோலை இளந்தையடி கடற்கரையில் நேற்று முன்தினம் (02) இரவு இச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுரங்குளி ஹிதாயத் நகரைச் சேர்ந்த கச்சு முஹம்மது

04

## வடக்கின் உதயம்



வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவத்தின் தீர்த்த திருவிழா நேற்றுக்காலை இடம்பெற்றது. ஆலயத்தில் காலை இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து, நாகபூசணி அம்மன், பிள்ளையார் மற்றும் முருகன் சகிதம் கங்காதரணியில் தீர்த்தமாடினார். நூற்றுக்கணக்கான பக்தர்கள் சூழ ஆலயத்தில் இருந்து தீர்த்தக்கரைக்கு எழுந்தருளினார். (யாழ்.விசேட நிருபர்)

# யாழ்ப்பாணம் - கொழும்பு விமான சேவை ஆரம்பம்

இரத்மலானையிலிருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கான உள்நாட்டு விமான சேவை கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது என இரத்மலானை விமான நிலையத்தின் முகாமையாளர் அருண ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து ஒரு மணி நேரம் பத்து நிமிடத்தில் யாழ்ப்பாணத்தை அடைய முடியும் எனவும் இந்த விமான சேவை வாரத்தில் சனி, ஞாயிறு, செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நான்கு நாட்களுக்கு காலை வேளைகளில் விமானங்கள் இயக்கப்படும் என்றும் கூறினார்.

12 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய செஸ்னா 208 என்ற விமானமே இந்தப் பயணத்தில் இணைக்கப்பட்டுள்ளது. ஃபிட்ஸ் ஏவியேஷன் / டேவிட் பீரிஸ் ஏவியேஷன் ஆகிய நிறுவனங்கள் இந்த பயணிகள் போக்குவரத்திற்காக விமானங்களைப் பயன்படுத்தியுள்ளன. ஒரு வழிக்கட்டணமாக ரூ.22 ஆயிரம் ரூபாவும் இருவழிக் கட்டணமாக ரூ.41500 அறவிடப்படும். இதில் பயணிக்கும் பயணி ஒருவர் 7 கிலோகிராம் பொதியை கொண்டு செல்ல முடியும் எனவும் தெரிவித்தார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் சென்று வருவதற்கும் வசதியாக இருக்கும் எனவும் இரத்மலானை விமான நிலையத்தின் முகாமையாளர் அருண ராஜபக்ஷ தெரிவித்தார்.



## கல்வயலில் 200வருடங்கள் பழமைவாய்ந்த ஆண்டான் குளம் புனரமைப்பு



தென்மராட்சிகல்வயல் பகுதியில் 200வருடங்கள் பழமைவாய்ந்த ஆண்டான் குளம் இளைஞர்களின் முன்மாதிரியான செயற்பாட்டினால் புனரமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குளம் முற்றுமுழுதாக கைவிடப்பட்டிருந்த நிலையில் கல்வயல் இளைஞர்கள் கல்வயல் சமூக சேவா சங்கம் ஊடாக குளத்தினை புனரமைப்புச் செய்து பராமரித்து வருகின்றனர்.

"கோவில்களைப் போன்று குளங்களும் எம் மரபுரிமையேஆறுகள் அற்ற யாழ்ப்பாணத்திற்கு குளங்களே மூலாதாரம்" என்ற சிந்தனைக்கமைவாக கல்வயல் இளைஞர்கள் மேற்படி நற்காரியத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாசையூரில் வெடிமருந்துகள் மீட்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் பாசையூர் பகுதியில் உள்ள பாழடைந்த வீட்டில் இருந்து வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாண விசேட பொலிஸ் அதிரடி படையினருக்கு தகவல் வழங்கப்பட்டு குறித்த வெடிமருந்துகள் நேற்றைய தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளன

பொதி ஒன்றினுள் இருந்து 20 ஜெலட்டின் குச்சிகளே அவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட ஜெலட்டின் குச்சிகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாண பொலிசாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஜெலட்டின் குச்சிகளில் உள்ள வெடி மருந்துகளை பிரித்தெடுத்து , மீன் பிடிக்கான டைனமேட் தயாரிக்க மீனவர்கள் பயன்டுத்துவதும் குறிப்பிடத்தக்கது.

டைனமேட் பயன்படுத்தி மீன் பிடிப்பது சட்டவிரோதமானது ஆகும்.



## மறவன்புலவு சச்சிதானந்தம் வீட்டிற்கு சென்ற முன்னாள் ஜனாதிபதி



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மறவன்புலவு சச்சிதானந்தத்தின் தென்மராட்சி வீட்டிற்கு சினேகித பூர்வமான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நான்கு நாட்கள் விஜயம் மேற்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால மறவன்புலவு சச்சிதானத்தத்தின் அழைப்பின் பேரில் வீடு தேடிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்திப்பில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்,சுதந்திர கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் சஜின் டிவாஸ் குணவர்த்தன மற்றும் அங்கஜன் இராமநாதனுடைய இணைப்புச் செயலாளர் கு.சிவராம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## மூதூரில் 02 கோடி ரூபா நிதியில் கலாசார மண்டபம் நிர்மாணம்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மூதூர்மட்டக்களப்பு பிரதான வீதியில் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சின் 02 கோடி 37 இலட்சம் ரூபா நிதியில் நவீன கலாசார மண்டபம் அமைக்கும் நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

மூதூர் பிரதேச சபையின் பராமரிப்பில் புதிய கலாசார மண்டப கண்காணிப்புக்கள் இடம்பெற உள்ள நிலையில் மூதூர் பிரதேசத்தில் மேற்கொள்ளும் பல்வேறு வகையான கலாசார நிகழ்வுகள் மற்றும் மக்களின் பொதுப் பயன்பாடுகளுக்குரிய பணிகளை மேற்கொள்வதற்கு வசதியாக நவீன வசதிகளுடன் இக்கலாசார மண்டபம் அமைக்கப்பட்டு வருகின்றது.

## இன்று கதிர்காமத்தில் தீர்த்தோற்சவம்

(காரைதீவு குறூப் நிருபர் சகா).

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழாவின் தீர்த்தோற்சவம் இன்று (4) செவ்வாய்க்கிழமை மாணிக்க கங்கையில் நடைபெறவுள்ளது. கடந்த ஜுன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய ஆடி வேல்விழா கடந்த 15 தினங்களாக லட்சக்கணக்கான பக்தர்கள் சகிதம் சிறப்பாக நடைபெற்று வந்தது. நேற்று இரவு கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே டிசான் குணசேகர தலைமையில் பெரஹரா சிறப்பாக நடைபெற்றது. அதேவேளை, உகந்தை மலை முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழாஉற்சவம் ஜுலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

# உணவகங்கள், விற்பனை நிலையங்கள் பரிசோதனை

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட உணவகங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை மற்றும் கல்முனை ஆகிய நகர் பிரதேசங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் உணவகங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

உணவுகள் மற்றும் விற்பனை நிலையங்களில் பொது மக்களின் உணவுப் பாதுகாப்பு தொடர்பான அறிவுறுத்தல் அடங்கிய சுவரொட்டி காட்சிப்படுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பாவனைக்கு உதவாத, பழுதடைந்த மற்றும் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் உணவகங்களுக் கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உணவகங்களில காட்சிப்படுத்தப்படவுள்ள விரைவுத் தகவல் குறியீடு (கியூ.ஆர்) ஊடாகவோ, எழுத்து மூலம் அல்லது வாய்மொழி மூலமாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உடனடியாக அறிவிக்குமாறு கேட்டுள்ளார்.

உணவகங்களில் உணவு கையாள்பவர்கள் உரிய மருத்துவ சான்றிதழ் தன் வசம் வைத்திருக்கவேண்டுமெனவும் தெரிவித்தார்.



## கிழக்கின் குரல்

## பதவியுயர்வு, இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தருக்கான பிரியாவிடை நிகழ்வு



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் பதில் நிருவாக உத்தியோகத்தராக கடமையாற்றி நிருவாக உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்று இடமாற்றம் பெற்றுச் சென்ற ஏ.சி. எம்.பளீல், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றி குடிவரவு, குடியகல்வு உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்ற எம்.எம். அஹமட் சனூன் மற்றும் இடமாற்றம் பெற்றச் சென்ற சமுர்த்தி முகாமையாளர் ஏ.எல்.யூ. ஜுனைதா, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சத்தியவதி மனோகரன்,ஜே. றையீஸா , அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏ.எல்.ஏ.வக்கீல், ஏ.ஜே. குறைசியா, எம்.எச்.எம். நிஸ்ரின் ஆகியோருக்கான பிரியாவிடை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வு பிரதேச செயலக நலன்புரிச் சங்க செயலாளர் எம். ஹுசைன் முபாரக்கின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக்கின் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, நிருவாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சி.எம். நஜீம், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம்.சமூன், நிதி உதவியாளர் ஏ.சி. முஹம்மட், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (தாபனம்) எம்.ஏ.சி.சீனத்தும்மா, திட்டமிடல் பிரிவு பிரதான முகாமை சேவை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.றியாஸ், பிரிவுக்கான பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் ,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

## நற்பிட்டிமுனை அல் அக்ஸாவில் "சித்திரச்சிதறல் " சித்திரக்கண்காட்சி



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகா வித்தியாலய அதிபர் முஹம்மட் பதியுத்தீனின் நெறிப்படுத்தலில் ஆசிரியர் மொனோஜனின் வழிகாட்டலில் இப்பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள் கண்காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் கலந்து சிறப்பித் தார் .

## ஓய்வு பெற்ற பொலிஸாரை கௌரவிக்கும் நிகழ்வு



இறக்காமம் தினகரன் நிருபர்

நாட்டிற்காக உயிர் நீத்த இறக்காமத்தை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவுகளையும், யுத்தத்தின் போது ஊனமுற்ற மற்றும் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இறக்காமம் மூன்யாட் வளாகத்தில் (02) இடம்பெற்றது.

இறக்காமம் பொலிஸ் உத்தியோகத்தர்களின் நலன் புரிச் சங்கத்தின் தலைவர் பிரதான பொலிஸ் பரிசோதகர் (IP) எம்.எம்.சமீம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.அகமட் நசீல் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன் போது நாட்டிற்காக உயிர் நீத்த படைவீரர்களுக்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தியதுடன், உயிர் நீத்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவுகளுக்கு உலர் உணவு பொதி வழங்கப்பட்டதுடன் ஊனமுற்ற மற்றும் ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வுக்கு இறக்காமம் பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மஹிந்த சேனாரத்தன, இறக்காமம் வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியர் திலான், இறக்காமம் ஜம்மியத்துல் உலமா சபை தலைவர் எம்.எச்.வஹாப் மற்றும் இறக்காமம் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் செயலாளர் ஜெ.ஹாறூன் ஆகியோர் பங்குபற்றினர்.

## தோட்டக்கிராமங்களில் பல்லின மரக்கறி பயிர்ச்செய்கை

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர், சம்பூர் கமநலசேவைகள் பிரிவுக்கு உட்பட்ட மேட்டுநில தோட்டக்காணிகளில் சேதன பசளையினை பயன்படுத்தி நஞ்சற்ற மரக்கறிப் பயிர்களை உற்பத்தி செய்வதில் இப்பிரதேச தோட்டக்காரர்கள் பெருமளவிலானோர் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். மேலும் மிளகாய், தக்காளி, கறிமிளகாய், அவரை, கத்தரி, புடோல், வெண்டி உள்ளிட்ட பல்லின மரக்கறி பயிரினங்களையும் உற்பத்தி செய்து வருகின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜூலை 4 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්




தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
ளுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

**விசேட மருத்துவர்கள் ஓய்வுபெறும் வயதெல்லை**

# 63 ஆக நீடிக்கும் அமைச்சரவைப் பத்திரம் இவ்வாரம் சமர்ப்பிப்பு

### சுகாதார அமைச்சின் செயலாளர் சந்ர குப்த தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

Ministry Of Health

விசேட மருத்துவர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும் வயதை 63 ஆக அதிகரிக்கும் அமைச்சரவைப் பத்திரத்தை இந்தவாரம் அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர் ஜானக்க ஸ்ரீசந்ரகுப்த அதுதொடர்பில் தெரிவிக்கையில், விசேட மருத்துவர்கள் 60 வயதில் ஓய்வுபெற்றுச் செல்வதால் பெருமளவு வெற்றிடங்கள் ஏற்படுகின்றன. அதனை கவனத்திற்கொண்டு சுகாதார அமைச்சு 60 வயது என்ற எல்லையை 63 வயதாக நீடிப்பதற்கு

04

**190 மருந்துகள் விரைவில் கொள்வனவு**

# நிதியைப் பெற்றுக் கொடுக்க திறைசேரி இணக்கம்

### சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் தற்போது நிலவும் 190 மருந்துகளுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

மேற்படி மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு நிதியினை பெற்றுக் கொடுப்பதற்கு திறைசேரி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்கனவே நிலவிய மருந்து தட்டுப்பாடுகளை கவனத்தில் கொண்டு பெருமளவு மருந்துகள் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், அதேவேளை பெருமளவிலான மருந்துகளின்

04

**ஊழியர் சேமலாப நிதி தொடர்பில்**

# வீண் விமர்சனங்களை முன்வைக்காமல் எதிர்க்கட்சி மாற்று வழியை முன்வைக்கட்டும்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்கத்தின் தேசிய கடன் மறுசீரமைப்பு திட்டத்தினால் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு எந்தவித பாதிப்பும் கிடையாது என்றும் அதன் அங்கத்தவரான ஊழியர்கள் எந்தவித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி, தேசிய கடன் மறு சீரமைப்பினால் மேற்படி நிதியங்களுக்கோ அவற்றின் அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவுகளுக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சியினர் அது தொடர்பில் மேற்கொண்டு வரும் எதிர்ப்பு பிரசாரங்கள் தொடர்பில் குறிப்பிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி, வெறுமனே எதிர்ப்பை தெரிவித்து பொய்யாக குரல் எழுப்புவதில் பிரயோசனம் கிடையாது என்றும் அது தொடர்பில் விமர்சிப்போர் மாற்று வழிகளை முன்வைக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய கடன் மறு சீரமைப்பு தொடர்பான தீர்மானம் கடந்த சனிக்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதன் போது எதிர்க்கட்சியிலிருந்தும் பலர் அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். அதே வேளை 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்காமையும் குறிப்பிடத்தக்கது.

**பொரலஸ்கமுவ பகுதியில்**

# ஒன்றரைக் கோடி ரூபா நகைகள் மற்றும் பணம் திருட்டு

### சந்தேக நபர்கள் மூவர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

துறைமுக அதிகார சபையின் மனித வள முகாமையாளரின் பொரலஸ்கமுவ வீட்டிற்குள் பிரவேசித்துள்ள குழுவொன்று அங்கு சேவைபுரியும் ஊழியரொருவரை கத்திமுனையில் அச்சுறுத்தி ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொரலஸ்கமுவபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்களை இதுவரை கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் மூவரில் மேற்படி கொள்ளையை மேற்கொண்ட நபர் அதற்கு திட்டம் வகுத்துக்கொடுத்த

04

# நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தேவையான நடவடிக்கை அவசியம்

### நாமல் ராஜபக்ச எம்.பி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான தீர்மானங்களை மேற்கொள்வது அவசியம் என்றும் எனினும் அந்த தீர்மானங்கள் மக்கள் நலன் சார்ந்ததாக அமைய வேண்டும் என்றும் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு திட்டம் மக்கள் நலன் தொடர்பானது அல்ல என்பதற்காகவே பாராளுமன்றத்தில் அதற்கான வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு

04

# இலங்கைக்கான புதிய UK தூதுவராக அன்ட்ரூ

### ஆகஸ்ட 01 முதல் பதவியேற்கிறார்



இலங்கைக்கான புதிய பிரித்தானிய உயர்ஸ்தானிகராக அன்ட்ரூ பெட்ரிக் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஒகஸ்ட் மாதம் முதல், கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராக பதவி விலகும் சாரா ஹல்டனுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆண்ட்ரூ பெட்ரிக் இதற்கு முன்னர் மியான்மாருக்கான இங்கிலாந்து தூதுவராக பணியாற்றியுள்ளார். அவர் தற்போது FCDO இடம்பெயர்வு மற்றும் நவீன அடிமைத்தன தூதராக பணியாற்றுகிறார்.

FCDO இன் கூற்றுப்படி, ஆண்ட்ரூ பெட்ரிக் 1989 இல் பிரிட்டிஷ் வெளிவிவகார அலுவலகத்தில் சேர்ந்த பின்னர் ஆப்கானிஸ்தான் மற்றும் தென்னாப்பிரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் பணிகளிலும் பணியாற்றியுள்ளார்.

# திருமலையில் இளைஞர்கள் இருவர் மீது துப்பாக்கிச்சூடு

### காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதி

திருகோணமலை, குச்சவெளி பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இளைஞர்கள் குச்சவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 1.15 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதுடன், துப்பாக்கிச் சூட்டில் 18 வயது மற்றும் 22 வயதுடைய இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர். அவர்கள் ஜெயநகர் பகுதியில் வசிப்பவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர் குறித்தோ இதன் பின்னணிகள் தொடர்பிலோ இதுவரை தகவல்கள் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்

குச்சவெளி பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

# செவ்வாய் கிரகத்திலுள்ள கற்பாறைகள் இலங்கையில்

### நாசா விஞ்சானிகள் குழு ஆய்வில் கண்டுபிடிப்பு



நாசா விஞ்ஞானிகள் குழுவொன்று தற்சமயம் சில முக்கியமான ஆய்வுக்காக இலங்கை வந்துள்ளது. அவர்கள் தற்சமயம் முக்கியமான சில ஆய்வில் ஈடுபடவுள்ளனர்.

அதாவது, செவ்வாய் கிரகத்தில் உள்ள கற்பாறைகளுக்கும், இலங்கையில் காணப்படும் கற்பாறைகளுக்கும் இடையிலுள்ள ஒத்த தன்மைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள குறித்த குழு இலங்கை வந்துள்ளது.

நாசாவின் மூத்த விஞ்ஞானியான இலங்கையை சேர்ந்தவரான சுனிதி கருணாதிலக தலைமையிலான நிபுணர்கள் குழு இலங்கைக்கு வந்துள்ளது.

இந்த விஞ்ஞானிகள் குழுவினர் முதலில் இலங்கையின் கினிகல்பலஸ்ஸ பிரதேசத்தில் கண்காணிப்பு பயணங்களை மேற்கொண்டு பின்னர் இந்திகொலபலஸ்ஸ மற்றும் உஸ்ஸங்கொட பகுதிகளுக்கு பயணிக்கவுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில், களனி பல்கலைக்கழக விரிவுரையாளர் வணக்கத்திற்குரிய கபுகொல்ல ஆனந்தகித்தி தேரர் கருத்து தெரிவிக்கையில்,

"இலங்கையின் புவியியல் அம்சங்கள், செவ்வாய் கிரகத்தில் உள்ள சில பாறைகள் மற்றும் மண்ணுடன் குறிப்பிடத்தக்க ஒத்த தன்மைகளை கொண்டுள்ளதாக தெரிய வருகிறது.

இந்தநிலையில், இது தொடர்பில் மேலதிக ஆய்வுகளை மேற்கொண்டு, இந்த இரண்டு வகையான பாறைகளுக்கும் சரியான பெயர்கள் சூட்டப்பட வேண்டுமா என்பதை தீர்மானிக்க வேண்டியது மிகவும் அவசியம்." என தேரர் தெரிவித்துள்ளார்.


**மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகள் பொது ஏல விற்பனை**

31.03.2022 வரை புத்தளம் பிராந்தியத்திலுள்ள மக்கள் வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் அடகு வைக்கப்பட்டு 04.08.2023 வரையில் மீட்கப்படாத தங்க நகைகளில் கீழே கொடுக்கப்பட்டுள்ள திகதி மற்றும் வளாகத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும். ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணிக்கு ஏலம் தொடங்கும்.

| ஏல விற்பனை திகதி | 05.08.2023 & 06.08.2023 |
|---|---|
| ஏல விற்பனை இடம் | மக்கள் வங்கி வென்னப்புவ கிளை வளாகம் |
| அடகு வைக்கப்பட்டுள்ள கிளைகள் | புத்தளம், சிலாபம், வென்னப்புவ, நாத்தாண்டிய, கல்பிட்டி, மாதம்பே, ஆனமடுவ, தங்கொடுவ, மஹாவெவ, மாரவில |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | மதுரங்குளிய, சிலாபம் கடற்றொழில், ஆரச்சிக்கட்டுவ, உடப்புவ, போலவத்த, லுணுவில, உல்ஹிட்டியாவ, கொட்டாரமுல்ல, வெலிப்பன்னகஹமுல்ல, நாரவில, நொரோச்சோலை, ஆண்டிகம, தொடுவாவ |

இந்த ஏலவிற்பனையை பொது மக்களுக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் மாற்ற, ரத்துசெய்ய, ஒன்றிணைக்க அல்லது ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமை அலுவலகம் (புத்தளம்).**
**தொலைபேசி எண். 032-2253301**

PEOPLE'S BANK
Pride of the Nation



National Lotteries Board
தேசிய லொத்தர் சபை
ஞாயிற்றுக்கிழமை 2023.07.02
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5163 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,141,096.00
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 5 2 2 6 4 4

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1193 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,722,600.40
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 21 51 55 72

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 472 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,548,404.80
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 06 16 26 47 — விசேட இலக்கினம் தனுசு

**ஜாதிக சம்பத** JATHIKA SAMPATHA — சீட்டிழுப்பு இலக்கம் 1618 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,149,734.32
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 7 7 8 5 6 3

**கொவிசெத** Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3405 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,256,334.80
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 07 11 57 76

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1511 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 333,814,798.00
ஆங்கில எழுத்து D — சுப்பர் இலக்கம் 21 — வெற்றி இலக்கங்கள் 01 23 37 46
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00



# பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 02/07/14/21 ஆகஸ்ட் 2023 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 02/07/14/21 ஆகஸ்ட் 2023 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 02/07/14/21 ஆகஸ்ட் 2023 | இல. 134, அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 03/08/15/22 ஆகஸ்ட் 2023 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 04/09/16/23 ஆகஸ்ட் 2023 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 10/17/24/28 ஆகஸ்ட் 2023 | இல. 44, ஹில்ஸ் ஸ்ட்ரீட், கண்டி. |
| 11/18/25/29 ஆகஸ்ட் 2023 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE
இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.



**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**திறைசேரி உண்டியல்கள் வழங்கல்**

**2023 ஜூலை 05ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 140,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123J067 | LKA18224A053 | LKA36424G054 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 60,000 | 40,000 | 40,000 | 140,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2023 ஜூலை 05 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2023 ஜூலை 07 |
| வழங்கப்படும் திகதி | : 2023 ஜூலை 07 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2023 ஜூலை 05, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

## அரசியலை ஒதுக்கி..

பதிலாக நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளுமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனைத்து எதிர்க்கட்சியினருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் உண்மைக்குப் புறம்பானதென குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, நாட்டை முன்னேற்றும் வேலைத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்த பெருமையுடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதற்கிணங்க, அவசியமெனில் சபாநாயகரிடத்தில் கலந்துரையாடி எதிர்க்கட்சியினருக்கு மேலதிக பொறுப்புக்களைப் பெற்றுக்கொடுக்கவும் தயாராகவுள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் 32 வருட அரசியல் வாழ்வை சிறப்பிக்கும் வகையில் ஹம்பாந்தோட்டை மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நேற்று ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுனு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "அமரவிரு அபிமன் 32" நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் போது "அமரவிரு அபிமன் 32" ஞாபகார்த்த நினைவுச் சிறப்பிதழ் வெளியிடப்பட்டு முதற்பிரதி ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக ஹம்பாந்தோட்டை மக்கள் சார்பாக நினைவுச் சின்னமொன்றை அமைச்சர் மஹிந்த அமரவீர ஜனாதிபதிக்கு வழங்கி வைத்ததுடன் ஹம்பாந்தோட்டை மக்களுக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர, ஆற்றிய சேவைகளைப் பாராட்டும் வகையில் ஜனாதிபதியினால் அமைச்சருக்கு நினைவுச் சின்னமொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி:

“தனது 32 வருட அரசியல் வாழ்வில் 28 வருடங்களை பாராளுமன்ற அங்கத்துவத்துடன் கழித்துள்ள அமைச்சர் மஹிந்த அமரவீர, மக்களுக்கு சிறப்பான சேவைகள் பலவற்றை செய்துள்ளார். இவர் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி அரசியல் களம் தொடர்பிலான அனுபவங்கள் நிறைந்தவர் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் இணைந்து பணியாற்றும் வாய்ப்பும் கிடைத்திருந்தது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்திலும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்தியிருந்தேன்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2022 ஆம் ஆண்டில் அனைத்து கட்சிகளினதும் தலைவர்களை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்திருந்தார்.

இறுதியில் ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் அந்தச் சந்திப்பை புறக்கணித்திருந்தன.

நானும், ஆர்.சம்பந்தனும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அந்த சந்திப்பில் கலந்துகொண்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல்களை முன்னெடுத்தோம்.

எவ்வாறாயினும் மே 09 நிகழ்வின் பின்னர் நாம் அனைவரையும் ஒன்றிணைக்க முற்பட்டோம். பிரதமர் பதவியைப் பொறுப்பேற்காவிட்டாலும் ஐக்கிய மக்கள் சக்தி எங்களுடைய வேலைத்திட்டங்களுடன் இணைந்துகொள்ளும் என எதிர்பார்த்த போதும் அது நடக்கவில்லை.

அதன் பின்பே தற்போதைய ஆளும் தரப்பை கட்டமைத்து எமது பணிகளை ஆரம்பித்தோம்.

நான் ஜனாதிபதியாகவும், பிரதமராக தினேஷ் குணவர்தனவும் பொறுப்பேற்றுக்கொண்ட அரசாங்கத்தின் விவசாய அமைச்சராக மஹிந்த அமரவீர தெரிவு செய்யப்பட்டார். விவசாயம் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரண்டும் முடங்கிக் கிடந்த காலத்திலேயே அவர் அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொண்டார்.

2023 ஆம் ஆண்டு தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக நல்லதொரு விளைச்சலை பெற்றுக் கொள்ள முயற்சித்தோம். உணவுப் பாதுகாப்பிற்கான குழுவொன்றையும் நிறுவினோம். ஆளும் மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தோம். எதிர்கட்சியினர் முன்வரவில்லை. இறுதியாக தன்னிறைவான விளைச்சல் கிடைத்த பின்னர் அதிகாரிகள் மக்களுக்கு அரிசியை பகிர்ந்தளித்தனர். அந்த நேரத்தில் தங்களால் பங்களிப்புச் செய்ய முடியாமல் போனமைக்காக எதிர்கட்சி உறுப்பினர்கள் வருத்தமடைந்தனர்.

மேற்படி பணிக்கு அர்பணிப்புடன் பங்களிப்பை வழங்கிய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் அவரின் கீழான அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்.

அதேபோல் கால்நடை வளங்களை மேம்படுத்துவதற்கான விரிவான வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்நாட்டின் சிறந்த கால்நடை வள நிறுவனமான அம்பேவல நிறுவனம் ரிதீகமவில் தங்களுக்கான பண்ணையொன்றை பெற்றுத்தருமாறு கோரியுள்ளது. அப்பகுதியில் கால்நடை வளங்களை மேம்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

.இந்தியாவின் பிரதான நிறுவனங்களில் ஒன்றான "அமுல்" நிறுவனம் கால்நடை அபிவிருத்திச் சபையுடன் இணைந்த வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

# விடுமுறைக்கு பின்னர் வங்கிகள், பங்குச்சந்தைகள் இன்று வழமைக்கு திரும்புகின்றன

லோரன்ஸ் செல்வநாயகம்

ஐந்து தினங்கள் தொடர்ச்சியான விடுமுறைக்குப் பின்னர் வங்கிகள் மற்றும் பங்குச் சந்தை செயற்பாடுகள் இன்று வழமைக்குத் திரும்புகி`ன்றன.

அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பு சம்பந்தமாக வங்கிகள் கடந்த வியாழக்கிழமை (29) முதல் நேற்று (3) வரை விடுமுறை வழங்கப்பட்டு மூடப்பட்டிருந்தன. அதன் சமகாலத்தில் கொழும்பு பங்குச் சந்தையின் செயற்பாடுகளும் ஐந்து நாட்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அந்தவகையில் இன்றைய தினம் முதல் நாடளாவிய ரீதியில் வழமை போன்று அனைத்து வங்கிக் கிளைகளும் இயங்கும் என்றும் அதற்கிணங்க வழமைபோன்று வங்கி வாடிக்கையாளர்கள் தமக்கான சேவைகளைப் பெற்றுக்கொள்ளமுடியுமென்றும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

# நுவரெலியா மாவட்டத்தில் மண்சரிவு அபாயம்

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் சீரற்ற காலநிலையை தொடர்ந்து பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளன. நேற்று (03) காலை நுவரெலியா தலவாக்கலை பிரதான வீதியில் நானுஓயா கிளாரண்டன் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக இவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டு ஒரு வழி போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக நுவரெலியா தலவாக்கலை ஏ7 பிரதான வீதியில் பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டு, மண் திட்டுக்கள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன் கற்கள் புரளும் அபாயமும் காணப்படுவதனால் இவ்வீதியில் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு அறிவுறுத்தப்படுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியான சீரற்ற வானிலை காரணமாக அடிக்கடி கடும் பனி மூட்டம் நிறைந்து காணப்படுவதனால் பிரதான வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக தங்களது வாகனங்களை செலுத்த வேண்டும் என போக்குவரத்து பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## ரூ.3000 க்கும்....

அந்தவகையில், 12.5 கிலோகிராம் எடைகொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 200 ரூபாவால் குறைவடையவுள்ளதாகவும் அதற்கிணங்க ஏனைய சமையல் எரிவாயு சிலிண்டர்களினதும் விலைகளில் மாற்றங்கள் ஏற்படுமென்றும் அவர் தெரிவி`த்துள்ளார்.

தற்போது லிற்றோ சமையல் எரிவாயு 12.5 கிலோகிராம் எடை கொண்ட சிலிண்டரொன்றின் விலை 3,186 ரூபாவாகவும் 5 கிலோகிராம் எடைகொண்ட சிலிண்டரொன்றின் விலை 1,281 ரூபாவாகவும் மற்றும் 2.3 கிலோகிராம் எடைகொண்ட சிலிண்டரொன்றின் விலை 598 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. அந்தவகையில் சமையல் எரிவாயுவுக்கான விலைச் சூத்திரத்திற்கிணங்க நான்காவது தடவையாகவும் தொடர்ச்சியாக இந்த விலை குறைப்பு மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மூன்று மாவட்டங்களில்....

விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே கோரளை, நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகல ஆகிய பகுதிகளுக்கு இவ்வெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## எட்டுப்பேர் காயம் ...

யாத்திரிகர்களை ஏற்றிச்சென்ற கெப் ரக வாகனமே வீதியை விட்டு விலகி மலையிலிருந்து பள்ளத்தை நோக்கி புரண்டதில் எட்டுப் பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளதுடன் அவர்களில் இருவர் கவலைக்கிடமாகியுள்ளனர். இவ்வாறு விபத்தில் காயமடைந்தவர்கள் திருகோணமலை, வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் மேற்படி விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

## மாணவர்களுக்கான...

சார்ந்த உயர் கல்வியை கற்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

2019, 2020, 2021ஆம் ஆண்டுகளில் உயர்தரக் கல்வியை முடித்தவர்கள் தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வியை தொடரும் வகையில் 5,000 பேருக்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தற்போது கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் இன்று 4ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 7ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம். இந்த திட்டத்துக்குள் உள்ளீர்க்கப்படுவோர் மூன்று வருட உயர்நிலைக் கல்வியை முடித்திருந்தால் விண்ணப்பிக்க வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

## பாதாள உலக....

தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களிலும் தென் மாகாணத்தின் கொஸ்கொட, அம்பலாங்கொட, அஹூங்கல்ல, எல்பிட்டிய, மீட்டியகொட, ஹிக்கடுவ மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளிலும் விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.வீதி சோதனைச் சாவடிகளை அமைத்து சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## ரயிலில் தினமும்...

சுமக்க வேண்டியுள்ளதென குறிப்பிடப்படுகின்றது.

இதன் காரணமாக ரயில் பயணச்சீட்டு சோதனை பரவலாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அலுவலக ரயில்களில் பெரும்பாலானோர் பயணச்சீட்டு இன்றி பயணம் செய்வதை அவதானித்துள்ளதாக பொது முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

பயணச்சீட்டு இல்லாமல் பயணித்தவர்களைத் தேடி கடந்த வாரம் நடத்தப்பட்ட சோதனையில் ஆயிரக் கணக்கானோர் சிக்கியுள்ளனர்.

அவ்வாறு சிக்கியவர்களிடம் 3000 ரூபாய் அபராதத்துடன் இரண்டு மடங்கு பயணக் கட்டணத்தை அறவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நாளொன்றுக்கு சுமார் நான்கு இலட்சம் பேர் ரயில் போக்குவரத்தை பயன்படுத்துவதாகவும், திணைக்களத்திற்கு மாதாந்தம் ஆயிரம் கோடி ரூபா வருமானம் கிடைத்தாலும், மொத்த வருமானமும் எரிபொருள் செலவிற்கு மட்டுமே செலவிட வேண்டியுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ரயில் கட்டணத்தை விட 75 சதவீதத்தால் பயணச்சீட்டு கட்டணத்தை அதிகரிக்க யோசனை முன்மொழியப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது

## மேன்முறையீட்டு...

குறித்த நலன்புரி திட்டத்திற்காக இதுவரையில் 5 லட்சத்து 60 ஆயிரத்து 211 மேன்முறையீடுகள் கிடைக்பெற்றுள்ளதுடன், 5 ஆயிரத்து 419 ஆட்சேபனைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அஸ்வெசும நலன்புரி சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், அஸ்வெசும திட்டத்திற்காக விசேட தேவையுடையவர்கள், முதியோர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான பெயர்ப்பட்டியல் நாளைய தினம் வெளியிடப்படும் என இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் தெரிவித்துள்ளார்.

## தனியார் மருத்துவ...

21ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களின் பதிவுச் சட்டத்தின் விதிகளின்படி, இலங்கையில் உள்ள அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களும் சுகாதார அமைச்சின் கீழ் உள்ள தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை சபையில் பதிவு செய்யப்பட வேண்டும். இது தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கடிதம் மூலம் அறிவித்து உரிய பதிவை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு பதிவு செய்யாத அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராகவும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி (01) வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் ஒழுங்குமுறை சபை தெரிவித்துள்ளது.

கடந்த நான்கு மாதங்களில் பதிவு செய்யப்படாத சுமார் 1,500 தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## புத்தளத்தில்...

சஹீத் (வயது 60) மற்றும் அஜ்வாத் சஹீர்கான் (வயது 22) ஆகியோரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பாட்டனும், பேரனும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த நபர்கள் சம்பவ தினத்தன்று குடும்பஸ்தர்கள் சகிதம் நுரைச்சோலை இளந்தையடி சவுக்குத் தோட்டத்திற்கு சென்று அங்கு கடலில் குளித்துக் கொண்டிருந்த போதே இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளனர்.

மேற்படி கடலில் நீராடிக் கொண்டிருந்தவர்களில் இரண்டு இளைஞர்கள் நீரில் மூழ்கியதை அவதானித்த அந்த இளைஞர்களின் பாட்டன், அவ்விரு இளைஞர்களையும் காப்பாற்றுவதற்காக கடலுக்குள் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது நீரில் மூழ்கிய இரண்டு இளைஞர்களில் ஒருவரை பாதுகாப்பான முறையில் வெளியே அழைத்து வந்த பாட்டன், மற்றைய இளைஞரையும் மீட்பதற்காக மீண்டும் கடலுக்குள் செல்ல தயாரான போதே அவர் திடீரென கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார் எனவும் சொல்லப்படுகிறது.

நீரில் மூழ்கி காணாமல் போன மற்றைய இளைஞரை அங்கிருந்தவர்கள் நுரைச்சோலை பொலிஸார் மற்றும் மீனவர்கள் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் நீரில் மூழ்கி காணாமல் போன குறித்த இளைஞனின் சடலம் இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் ஆலங்குடா கரையோர பகுதியில் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இலங்கையில்......

இந்நாட்டின் வங்கி கட்டமைப்பு சரிவடையும் என சில தரப்புகள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாலும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் முன்னெடுத்து வரும் திட்டங்களுக்கு சர்வதேசத்தின் பாராட்டு கிடைத்துள்ளதெனவும் அமைச்சர் தெரிவித்தார். திறமான நாட்டிற்கு அனைவரும் ஒரே வழிக்கு என்ற துணைப் பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (03)ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## நாட்டில் மேலும்...

நேற்று முன்தினம் வரை 49 ஆயிரத்து 559 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதில் அதிகபட்சமாக கம்பஹா மாவட்டத்தில் 10 ஆயிரத்து 879 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் 24 ஆயிரத்து 730 பேரும் பாதிக்கப்படுள்ளனர்.

அத்துடன், ஜூன் மாதத்தில் 9 ஆயிரத்து 916 டெங்கு தொற்றாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இது கடந்த ஜனவரி 2023 க்குப் பிறகு ஒரு மாதத்திற்குள் பதிவான அதிக எண்ணிக்கையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2023ஆம் ஆண்டில் இதுவரை நாட்டில் 49,759 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த வார நிலவரப்படி டெங்குவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது.

டெங்கு நோயாளர்களில் மேல் மாகாணத்தில் இருந்து 24,837 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும், ஜூன் மாதத்தில் கிட்டத்தட்ட 10,000 டெங்கு நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளனர். 61 பிரதேசங்களை டெங்கு அபாய வலயங்களாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அறிவித்துள்ளது.

## 63 ஆக நீடிக்கும்... 03ஆம் பக்கத் தொடர்

தீர்மானித்துள்ளது.

அதேவேளை, இந்த வயதெல்லை நீடிப்பு தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், இந்த வாரத்தில் அதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அடுத்தகட்ட நடவடக்கைகள் மேற்கொள்ளப் படுமென்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

## நிதியைப் பெற்றுக் கொடுக்க... 03ஆம் பக்கத் தொடர்

விலைகள் குறைக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் சுட்டிக்காட்டினார். மத்திய மருந்து களஞ்சிய சாலையில் தற்போது 190 மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவுவதை சுட்டிக்காட்டிய அமைச்சர், அத்தியாவசியமாக தேவைப்படும் மருந்துகளை விரைவாக கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அதே வேளை, இந்த வருடத்தின் இறுதியில் 20 மருந்துகளை உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியும் என்பதை தெரிவித்த அமைச்சர் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## மலையகத்தில்...

செயற்பாடுகள் இடம்பெறுவதாக பாதிக்கப்பட்டோர் முறைப்பாடு செய்து வருகின்றனர்.

சுமார் ஒரு இலட்சம் ரூபாய் வரை பணத்தை பெறும் குறித்த ஒரு வலையமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆரம்பத்தில், பயனாளர்களுக்கு பணத்துக்குப் பதிலாக சுமார் ஐயாயிரம் பெறுமதியான தேநீர் கோப்பை தொகுதிகள் அல்லது உணவுத் தட்டுகளை வழங்குவதாகவும், பின்னர் 20 பேரை இணைத்துக்கொண்டு அதன் மூலம் பணத்தைப் பெற்றுக்கொடுத்தால் மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாய் வங்கிக்கு வைப்பீடு செய்யப்படும் என்றும் கூறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த வலையமைப்பினரோடு இணைந்துகொள்பவர்களை சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வது, கவர்ச்சியான ஆடம்பரமான ஆண்/பெண்களை வரவழைத்து பணம் சம்பாதிக்கும் வழிவகைகளை கூறுவது என பலவாறு வலையமைப்பினர் செயற்படுவதாக முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

மேலும், இந்த வலையமைப்போடு தொடர்புகொள்பவர்கள், தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களை இதில் இணைத்துக்கொள்வதற்காக அவர்களது வீடுகளுக்கும் சென்று வலையமைப்பினர் தொல்லை கொடுப்பதாகவும், அவர்கள் பல வாகனங்களின் முன்பாக நின்று எடுக்கப்பட்ட படங்களை தமது முகநூல் பக்கத்தில் காட்டி பலரை மூளைச்சலவை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் பிராந்திய கல்வி மற்றும் சுகாதார திணைக்களங்கள், பிரபல கல்லூரிகள், உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச செயலகங்கள் போன்றவற்றில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு பிரதானமாக செயற்படுவதாகவும் கூறப்படுகிறது.

இவர்கள் அரச உத்தியோகத்தர்களாக இருப்பதால் பலரும் நம்பி பணத்தை கொடுத்து ஏமாற்றமடைந்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பலர் மீது பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஒன்றரைக் கோடி ரூபா... 03ஆம் பக்கத் தொடர்

நபர் மற்றும் கொள்ளையிட்ட பணம் மற்றும் நகைகளை ஒழித்து வைத்துள்ள நபர் ஆகியோரும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வீட்டில் கொள்ளையடித்துள்ள 35 இலட்சம் ரூபா பணத்தில் 10 இலட்சம் ரூபாவையும் 40 இலட்சம் பெறுமதியான தங்க நகைகளையும் அவர்களை கைதுசெய்யும்போது அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அவர்களிடமிருந்து கைக்குண்டு ஒன்றையும் 24 கிராம் ஹெரோயின் போதைப் பொருளையும் கைப்பற்றமுடிந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வீட்டில் வேலைசெய்த பெண்மணியும் அவரது கணவர் மற்றும் பிள்ளைகள் சில தினங்களாக மேற்படி முகாமையாளரின் வீட்டில் தங்கியுள்ள நிலையில் அவர்கள் தமது கிராமத்திற்குச் சென்று மீண்டும் வீடு திரும்பும் போது அவர்களுக்குப் பின்னால் பின்தொடர்ந்து வந்த நபரே மரண அச்சுறுத்தல் விடுத்து கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகவும் அவர் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

மேற்படி கொள்ளையுடன் சம்பநதப்பட்ட நபர் குறித்த வீட்டிற்கு பல தடவைகள் தொழிலுக்காக வந்துசென்றுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## பொருளாதார ரீதியாக...

குழு கூட்டம் இரத்தினபுரி மாநகரசபை மண்டபத்தில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

இரத்தினபுரி தேர்தல் தொகுதியின் ஐ.தே.கட்சி அமைப்பாளர் லக்ஸ்மன் முனசிங்க தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் ஐ.தே.கட்சியின் இரத்தினபுரி மாவட்ட தலைவர் ஹசித்த முஹாந்திரம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான தேவப்பெரும, சமன் இரத்னப்பிரிய, இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன கூறியதாவது, ‘அஸ்வெசும’ நிவாரண கொடுப்பனவுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அண்மைய கணக்கெடுப்பின்படி, 28 இலட்சம் பேர் அஸ்வெசும நிவாரணத்திட்டத்தில் உள்வாங் கப்படவுள்ளனர்.

இதனை நாம் 40 இலட்சம் வரை அதிகரிக்க முடியும். அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் பெறப்படும் அல்லது பொதுமக்கள் வழங்கும் தகவல்கள் உண்மையாக இருக்க வேண்டும். உண்மைத் தகவல்களை வழங்காமல் அரசியல் ரீதியாகவும் பல்வேறு வகையிலும் கடந்த காலங்களில் சனசவிய, மற்றும் சமுர்த்தி நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை மறுசீரமைப்பு செய்து உண்மையாக கிடைக்க வேண்டிய ஏழை எளிய மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்பதே அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் நோக்கமாகும். ஏழைத்தன்மையை தொடர்ந்து வைத்திருந்து அதன்மூலம் அரசியல் செய்ய நாம் விரும்பவில்லை.

அஸ்வெசும நிவாரணத்திட்டத்தில் உள்வாங்கப் படாதவர்கள் அவர்களின் கோரிக்கைகளை நிகழ்நிலையிலும் அல்லது பிரதேச செயலகத்தில் அல்லது ஜனாதிபதி காரியாலயத்திலும் சமர்ப்பிக்க முடியும். அதனை விடுத்து கூக்குரலிட்டு பயனில்லை. எவ்வளவு காலத்துக்கு எம்மால் கூக்குரலிட முடியும்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய காலத்திலும் சண்டையிட்டு கொள்கின்றனர். சண்டையிடுவதன் நோக்கம் அவர்கள் அரசாங்கத்துக்கு சரியான யோசனைகளை முன்வைக்க முன்வருவதில்லை. அவர்களிடம் முன்வைப்பதற்கான சரியான திட்டம் எதுவுமில்லை யென்றும் அவர் தெரிவித்தார்.

## நாட்டின் பொருளாதாரத்தை... 03ஆம் பக்கத் தொடர்

அதுவல்ல என்பதை சுட்டிக் காட்டியுள்ள அவர், இத்தகைய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அதற்கான தெளிவை மக்களுக்கு வழங்க வேண்டியது முக்கியம் என்றும் தெரிவித்துள்ளார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு அவசியம்தான், என்றாலும் அது முறையான வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை சுட்டிக் காட்டியுள்ள அவர், ஒரு குழுவினர் மறுசீரமைப்புக்குள் உள்வாங்கப்படவும் மேலும் ஒரு குழு அவ்வாறு உள்வாங்கப் படாமையும் இடம் பெறும்போது அது தொடர்பான காரணங்களை தெளிவுபடுத்துவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புதிய விமானப்படை தளபதி பொறுப்பேற்பு




ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் 19 வது விமானப்படை தளபதியாக நியமிக்கப்பட்ட எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக தனது பணியை ஜுலை 01ம் திகதி தனது காரியலையத்தில் மத வழிபாடுகளுடன் குடும்ப அங்கத்தவர்கள் முன்னிலையில் ஆரம்பித்தார். புதிய விமானப்படை தளபதி பொறுப்பேற்பு

# நாகலாந்தில் மகளிரை சிறுதொழில் முயற்சியாளர்களாக்கும் திட்டம்

நாகலாந்தின் வோக்கா பகுதியின் சானிஸ் நகரில் நடைபெற்ற இரண்டுநாள் கருத்தரங்கில், பிடிக்கப்பட்ட மீன்களை சுத்தப்படுத்தி பதப்படுத்துவது பற்றியும் அவற்றை பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களாக விற்பனை செய்வது பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. பெருவாரியான பெண்கள் கலந்து கொண்ட இந்தக் கருத்தரங்கு, சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பெண்களை சிறு தொழில் உரிமையாளர்களாக்கும் இலக்கைக் கொண்டதாகும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாகலாந்தின் முக்கிய மாவட்டமாகவும் நீர்வளம் கொண்டதாகவும் கருதப்படும் வோக்கா, நாகர்களின் முக்கிய உணவாக மூங்கில் குருத்துகள் அதிகம் உற்பத்தி செய்யப்படும் இடமாகும். இங்குள்ள டோயாங் அணைக்கட்டு நாகலாந்தின் பெரிய அணைக்கட்டாகும். தவிர,மேலும் பலகுளங்கள் இங்குள்ளன. எனவே நன்னீர் மீன்பிடித் தொழில் முக்கிய வருவாய் ஈட்டும் தொழிலாகத் திகழ்கிறது.

இந்த அடிப்படையிலேயே பிடிக்கப்பட்ட மீன்களைபதப்படுத்தி, பெறுமதிசேர்க்கப்பட்ட வேறு வடிவங்களில் விற்பனை செய்வதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இக் கருத்தரங்கும் பெண்களை சிறிய தொழில் முயற்சியாளர்களாக மாற்றும் ஒரு திட்டமாகவே கருதப்படுகிறது.





கொழும்பு mutual plaza star லயன் கழக (District 306 B2) 20232024க்கான புதிய செயற்குழு சத்திய பிரமாண நிகழ்வு அண்மையில் கொழும்பு Shen Zhen hotal இல் நடைபெற்றது. பிரதம அதிதியாக தேசமான Lion சசிகுமார் சுப்பிரமணியம் PMJF. PMAF JP கலந்து கொண்டார். புதிய தலைவராக தேசமான Lion தர்மராஜா தவசீலன் MAF jP தெரிவு செய்யப்பட்டார்.

## சீன வலைத்தள பொருளாதார விமர்சகரின் மீது தடை

# பொருளாதார வீழ்ச்சி, அதன் விளைவுகள் பற்றிய கருத்துகளால் சீன அரசு ஆத்திரம்

சீனாவின் முக்கியமான நிதித்துறை விமர்சகர்களில் ஒருவரான வூ ஸியாவோபோவை சீன அரசு சமூக வலைத்தளங்களில் இயங்குவதைத் தடைசெய்துள்ளது.

ட்விட்டரெப் போன்ற சீன வலைத்தளமொன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது. தனது வலைத் தளபதிவுகளில் சீனாவில் நிலவும் தொழில் அற்றோர் தொகையை உயர்த்திக் காட்டியது.

பங்குச் சந்தை அபிவிருத்தி தொடர்பாக குறைவாக மதிப்பிட்டது, சீனாவின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்தும் விமர்சித்தும் கருத்து வெளியிட்டது என்பனவே இத் தடைக்கான காரணங்களாக இருக்க வேண்டும் என இவ் வலைத்தளம் காரணங்களை குறிப்பிட்டிருந்தாலும், அவர் ஏற்கனவே தெரிவித்து வந்த விமர்சனங்களையும் கருத்தில் கொண்டுதான் இத் தடை விதிக்கப்பட்டதா என்று தெரியவில்லை எனவும் அது குறிப்பிட்டுள்ளது.

சீனாவின் உற்பத்தி மற்றும் ஆதன துறைகள் வழமையாக பல நூறு மில்லியன் பேருக்கு வருடா வருடம் தொழில்களை ஏற்படுத்தித் தரும் என்றும் ஆனால் கொவிட்டுக்கு பின்னரான காலப்பகுதியில் இத்துறைகள் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கத் தவறி விட்டன என இவர் தனது வலைத்தளமான 'ஸியாவோ வொங்ஷூ'வில் குறிப்பிட்டிருந்தார்.

கடந்தத சகாப்தங்களினை எடுத்துக் கொண்டால், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வீதம் தற்போது வீழ்ச்சி கண்டுள்ளதோடு கடந்த மே மாதம் இது 20.8 சதவீதமாகவும் உயர்ந்தது. சீன பல்கலைக் கழகங்களில் இருந்து 11.58 மில்லியன் பட்டதாரிகள் ஜூலை–ஓகஸ்ட் காலப்பகுதியில் வெளியேற இருப்பதால் தொழில் வழங்கமுடியாத நெருக்கடிமேலும் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நகர்ப் புறங்களில் தொழில் அற்றோர் சத வீதம் கடந்த மாதம் 5.2 என்பதாக நிலவியதோடு பெரிய தொழில் நுட்ப நிறுவனங்கள் கடந்த சில மாதங்களாக ஆட்குறைப்பில் ஈடுபட்டு வருவதாகவும் செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

வூவின் வலைத்தள நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளமை தொடர்பாக அவர் இதுவரைஎந்தக் கருத்தையும் பதிவிடவில்லை. அதேசமயம், இணையத்தில் 4.7 மில்லியன் சீனர்கள் அவரைபின்பற்றுகிறார்கள் என்பது கடந்த ஏப்ரல் மாதம் தெரிய வந்தமை அவரது கருத்துகளுக்கு மரியாதை இருப்பதையே சுட்டிக்காட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் காணப்படும் குறைவான கொள்வனவு சக்தி, தனியார் துறையின் முதலீடுகள் குறைந்துள்ளமை, ஏற்றுமதியில் காணப்படும் வீழ்ச்சி காரணமாக இவ்வாண்டுக்கான அந்நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி மீதான எதிர்வு கூறலை பிரபல பன்னாட்டு முதலீட்டு நிறுவனங்கள் தவிர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# புனித அல் குர்ஆன் அவமதிப்பு; அல் ஹிக்மா நிறுவனம் கண்டிப்பு



முஸ்லிம்களின் புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையின் பின்னர் சுவீடனின் ஸ்டொக்ஹோம் பிரதான மஸ்ஜித்துக்கு முன்பாக வந்த வன்முறையாளர் ஒருவர் புனித அல் குர்ஆனை அவமதித்து எரித்த கோழைத்தனமான சம்பவத்தை இலங்கை அல் ஹிக்மா நிறுவனம் மிக வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பில் அல் ஹிக்மா நிறுவனத்தின் தலைவரான மௌலவி எம்.எச். ஷேஹுத்தீன் மதனி விடுத்துள்ள அறிக்கையில், முஸ்லிம்கள் உயிரிலும் மேலாகக் கருதும் புனித குர்ஆனை இவ்வாறு மோசமாக அவமதித்து எரித்துள்ளமை அனைத்து முஸ்லிம்களையும் வேதனைக்கும் ஆழ்ந்த கவலைக்கும் உள்ளாக்கியுள்ளது. இம்மோசமான செயலை அறிந்ததும் முதலில் கடும் கண்டனத்தை வெளியிட்ட சவூதி அரேபியா, இச் சம்பவம் தொடர்பில் உடனடியாகக் கவனம் செலுத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக இவ்வாறான நடவடிக்கைகள் இனிமேல் இடம்பெறாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளது. அதற்கமைய இவ்விடயம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுவீடன் சவூதிக்கு அறிவித்துள்ளது.

இதேவேளை, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, இவ்வாறான செயல்கள் திரும்பத் திரும்ப இடம்பெறுவதை தடுக்கும் வகையில் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு ஐ.நா சபையின் ஒப்பந்தத்தின்படி, உலகளவில் இன, மத, மொழி மற்றும் பால் ரீதியான பாகுபாடின்றி அனைவருக்குமான மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மதிக்கவும் பேணவும் ஊக்குவிக்கவும் உறுதிப்படுத்தவும் அனைத்து நாடுகளும் தமது பொறுப்பை மீண்டும் புதிதாக உறுதிப்படுத்திக் கொள்ளவும் அவ்வமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கை அரசாங்கமும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையும் இவ்விழிசெயலை வன்மையாகக் கண்டித்துள்ளன.

அந்த வகையில் இம்மோசமான செயலை நாமும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். எந்தவொரு மனிதனும் எந்த மதமும் ஏற்றுக்கொள்ளாத படுமோசமான இச்செயலால் ஒட்டுமொத்த முஸ்லிம்களும் வேதனையும் கவலையும் அடைந்துள்ளனர். இவ் விழிசெயல் அமைதி, சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களதும் கண்டனத்திற்கும் உள்ளாகியுள்ளது.

இஸ்லாமானது சகிப்புத்தன்மை, அமைதி, சகவாழ்வு, நடுநிலை, தீவிரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் அடியோடு கலைதல், பிற மதங்களுக்கு மரியாதை செலுத்துதல் ஆகியவற்றை எப்போதும் வலியுறுத்தக்கூடியதாக உள்ளது.

அதனால் உலக மக்களின் சக வாழ்வுக்கும் அமைதிக்கும் குந்தகம் விளைக்கும் இவ்வாறான செயல் இனியொரு போதும் இடம்பெறா திருக்கவென சம்பந்தப்பட்டவர்கள் மீது சுவீடன் கடும் நடவடிக்கை எடுப்பதோடு உலக தலைவர்களும் இவ்விடயத்தில் உரிய கவனம் செலுத்தி இவ்விதமான செயல்கள் இனிமேலும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தவென தகுந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# 'கனவுகள் நிதர்சனமானது அமெரிக்காவிலும் இந்தியாவிலும் தான்'

இந்தியாவில் தான் கனவுகள் தினமும் நிதர்சனமாக முடியும். அதேசமயம் இந்தியக் கனவும் அமெரிக்கக் கனவும் ஒரே நாணயத்தின் இரு பகுதிகள் என இந்தியாவுக்கானஅமெரிக்கத் தூதுவர் எரிக் கார்செட்டி இந்தியாவை புகழ்ந்துரைத்துள்ளார். புதுடில்லி தொழில்நுட்ப நிலையத்தில் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே புதிய உதயம் என்ற தலைப்பில் உரையாற்றிய அவர் இவ்வாறு கூறினார்.

ஒருகாலத்தில் தேநீர் விற்ற ஒரு பையன் இப்போது உலக அரங்கில் இந்தியாவை வீறு நடைபோடச் செய்கிறான். ஒரு சந்தாலி பழங்குடிப் பெண் இந்திய ஜனாதிபதியாக முடிகிறது.

இதேபோல ஒரு உழைப்பாளியின் மகனும், வந்தேறு குடிகளான பெற்றோருக்கு பிறந்த பெண்ணும் இன்னும் அமெரிக்காவை வழி நடத்துகிறார்கள். நாங்கள் சாதகத் தன்மைகளையும், புதிய வாய்ப்புகளையும், அறிவையும் அரவணைத்து செல்பவர்கள் என்று அவர் தன்னுரையில் உதாரணம் காட்டிப் பேசினார்.

இந்தியாவும் அமெரிக்காவும் தமது பார்வைகளை மீளமைத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவை நிதர்சனமாக வேண்டுமெனவும் குறிப்பிட்ட அவர், அமெரிக்காவுடன் இணைந்தே இந்தியா அதிக இராணுவ ஒத்திகைகளை நடத்தியிருப்பதாகத் தெரிவித்தார்.

அமெரிக்காவில் 40 லட்சத்துக்கும் அதிகமான இந்தியர்கள் வசிப்பதாகவும் தத்தமது கலாசாரங்களை கௌரவப்படுத்துவதன் ஊடாக நட்பு வளர்க்கப்படுவதாகவும் அனுபவங்கள் பகிரப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்தியப் பிரதமரின் அமெரிக்க விஜயத்தின் பின்னர் அமெரிக்கத் தூதுவர் நிகழ்த்திய இவ்வுரை, இவ் விஜயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது எனஅவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.




# பெருந்தோட்ட நிறுவனங்கள் தொழில் உரிமைகளை மறுத்தால் கடும் நடவடிக்கை

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் எச்சரிக்கை

பெருந்தோட்ட தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டும் வகையிலும், அவர்களுக்கான தொழில் உரிமைகளை வழங்குவதற்கு மறுக்கும் வகையிலும் செயற்படும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



ஹற்றன் பெருந்தோட்ட யாக்கத்தின் நிர்வாகத்துக்குட்பட்ட தோட்டங்களில் நீண்டகாலமாக நிலவும் தொழில் பிணக்குகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கான கூட்டமொன்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் கொழும்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமிய பவனில் நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

இ.தொ.காவின் சார்பில் அதன் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், தேசிய அமைப்பாளர் ஏ.பி. சக்திவேல், உப தலைவர் பாரத் அருள்சாமி, சிரேஷ்ட சட்ட ஆலோசகர் மாரிமுத்து, தொழிற்சங்க தேசிய அமைப்பாளர் லோகதாஸ், கட்சி போஷகர் சிவராஜா, தோட்ட கமிட்டி தலைவர்களும், ஹற்றன் பெருந்தோட்ட யாக்கத்தின் சார்பில் அதன் நிறைவேற்று முகாமையாளர் வருண மற்றும் தோட்ட முகாமையாளர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தொழில் பிணக்குகளுக்கு விரைவில் தீர்வுகளை வழங்குவது பற்றி ஆராயப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் உழைப்பை மாத்திரம் சுரண்டிக்கொண்டிருக்கும் தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கபோவதாகவும், தீர்வை வழங்காவிட்டால் ஹற்றன் பெருந்தோட்ட யாக்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் இதன் போது எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என தோட்ட நிறுவன தரப்பில் அமைச்சருக்கு உறுதியளிக்கப்பட்டது.

# துன்பத்தின் பிடிக்குள் சிக்கியிருந்த மக்களை மீட்டெடுத்த சிறந்த தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

## ஜனாதிபதி பணியாட்தொகுதி பிரதானி சாகல ரத்நாயக்க புகழாரம்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



துன்பத்தின் பிடிக்குள் சிக்கியிருந்த நாட்டு மக்களை மீட்டெடுத்த சிறந்த தலைவரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், ஜனாதிபதி பணியாட்தொகுதி பிரதானியுமான சாகல ரத்னாயக்க புகழாரம் சூட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மஸ்கெலியா தொகுதிக்கான உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டம் ஹற்றனில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அஸ்வெசும திட்டம் தொடர்பில் இதுவரை 4 இலட்சத்து 91 ஆயிரம் மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன, இதில் 6 ஆயிரத்து 773 ஆட்சேபனைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பில் பரிசீலனை நடத்தப்பட்டு குறைந்த வருமானம் பெறும் பயனாளிகளுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் அஸ்வெசும திட்டத்தின் ஊடாக நிவாரணம் வழங்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியை கிராமிய மட்டத்தில் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரிப்பு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



மத்திய மலைநாட்டில் பெய்து வரும் கடும் மழை காரணமாக மலையகத்தில் நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையினால் நீரோடைகள், ஆறுகள் பெருக்கெடுத்து நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்து காணப்பட்டது. மேல் கொத்மலை, விமலசுரேந்திர, காசல் ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது. இந்நீரினை வெளியேற்றுவதற்காக நீரேந்தும் பகுதிகளில் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் வான்கதவு ஒன்று திறக்கப்பட்டிருந்தது.

அதனால் நீர்த்தேக்கப் பகுதிகளில் தாழ்வான பிரதேசத்தில் வாழ்கின்ற குடியிருப்பாளர்கள் அவதானத்துடன் இருக்கும் படி அதிகாரிகளினால் பணிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், விமலசுரேந்திர நீர்த்தேக்கமும் முழுமையாக நிரம்பி மேலதிக நீர் நேற்று காலை முதல் வான் மேவி பாய்கின்றது.

இதனால் அணைக்கட்டிற்கு கீழ் பகுதியில் ஆற்றை பயன்படுத்துபவர்கள் அவதானத்துடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதோடு, களனி ஆற்றை பயன்படுத்துபவர்களும் அவதானத்துடன் இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று

வாதம், பித்தம், சிலேத்துமம் என்று மருத்துவ நூலோர் கணித்துள்ள மூன்றில் ஒன்று அளவுக்கு அதிகமானாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும்.

# விலைக்குறைப்பின் பிரதிபலன்கள் மக்களைச் சென்றடைய வேண்டும்

நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான போது அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களதும் விலைகள் அதிகரிக்கலாயின. இவ்விலையேற்றம் காரணமாக மக்கள் பலவிதமான அசௌகரியங்களையும் எதிர் கொண்டனர். ஆன போதிலும் நாட்டின் பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டு அந்த அசௌகரியங்களின் போது மக்கள் பொறுமை காத்தனர்.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் நாட்டுக்கு நன்மைகளை அளிக்க ஆரம்பித்தன. இதன் பயனாக பொருளாதார நெருக்கடி நிலவிய போது நாட்டில் காணப்பட்ட நெருக்கடிகளும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கலாயின. அத்தோடு பொருளாதார மீட்சிக்கான வேலைத்திட்டங்களின் பிரதிபலன்களை அடிப்படையாகக் கொண்டு பொருட்களின் விலைகளும் கட்டம் கட்டமாக குறைக்கப்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையில் ஏற்கனவே பல பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. சில பொருட்களுக்கு பல தடவை விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் குறிப்பிடத்தக்கவையாகும்.

நாடு அடைந்து கொள்ளும் பொருளாதார நலன்களுக்கு அமைய பொருட்களின் விலைகள் குறைக்கப்படுகின்ற போதிலும் அதன் பிரதிபலன்கள் இன்னும் முழுமையாக மக்களை சென்றடையாத நிலைமையும் காணப்படவே செய்கிறது. இதற்கு சில தனியார் வர்த்தகர்களும் காரணமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக புறக்கோட்டை மொத்த வியாபாரிகள் கையாளும் ஏகபோக உரிமை காரணமாக நாடு பொருளாதார ரீதியில் பெற்றுக் கொள்ளும் பிரதிபலன்களை மக்களுக்கு உரிய முறையில் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக பிரதேசமட்ட வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், சில வர்த்தகர்கள் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் போது உடனடியாக விலைகளை அதிகரிக்கின்றனர். ஆனால் அப்பொருட்களுக்கு விலை குறைப்பு செய்யப்படும் போது அதனைச் செய்வதற்கு தயங்குவதுடன் விலைக் குறைப்பைத் தவிர்ப்பதற்காகப் பலவிதமான சாக்குப்போக்குகளைக் கூறுகின்றனர்.

பொருளாதார நெருக்கடி காலப்பகுதியில் எல்லாப் பொருட்களையும் போன்று பேக்கரி உற்பத்திகளுக்கும் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

ஆனால் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெற்று வருவதனை அடிப்படையாகக் கொண்டுதான் தற்போது பொருட்களின் விலைகளும் குறைக்கப்படுகின்றன.

அந்த வகையில் கடந்த மாத முற்பகுதியில் எரிவாயுவுக்கு விலை குறைப்பு செய்யப்பட்ட போது பேக்கரி உற்பத்திகளின் விலைகளும் குறைக்கப்படும் என பரவலாக எதிர்பார்க்கப்பட்டிருந்த சூழலில் பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் என்.கே. ஜயவர்தன, 'எரிவாயு விலை குறைக்கப்பட்டாலும் பேக்கரி உற்பத்திகளின் விலைகளைக் குறைக்க முடியாது. 75 வீதமான பேக்கரிகள் மின்சாரத்தில் இயங்குவதாகவும் எரிவாயு விலை அதிகரித்த போது தாம் பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரிக்கவில்லை' என்றும் குறிப்பிட்டதோடு பேக்கரி உற்பத்திகளின் விலைகளைக் குறைக்கவும் மறுக்கப்பட்டது.

தற்போது மின்கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. எரிவாயுவுக்கு மீண்டும் விலைக் குறைப்பை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்ஜித் விதானகே, 'மின்கட்டணக் குறைப்புக்கு ஏற்ப பேக்கரி உற்பத்திகளின் விலைகளைக் குறைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தச் சூழலிலும் விலைக் குறைப்பைத் தவிர்ப்பதற்கு ஏதாவது சாக்குபோக்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் கூறுமா? என்ற கேள்வியும் நிலவவே செய்கிறது. ஆனால் கடந்த முறை போன்று, இம்முறை மின் கட்டணத்திற்கு தான் விலை குறைக்கப்பட்டுள்ளது எனக்கூறி பேக்கரி உற்பத்திகளின் விலை குறைப்பு கோரிக்கையைத் தவிர்க்க முயற்சிக்க முடியாது. ஏனெனில் எரிவாயுவுக்கும் விலை குறைக்கப்பட உள்ளது. அதனால் பேக்கரி உற்பத்திகளுக்கு விரும்பியோ விரும்பாமலோ விலைக் குறைப்பு செய்தாக வேண்டும். அதுவே நியாயமானது.

ஆகவே அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களதும் விலைகள் குறைக்கப்படும் போது அதன் பிரதிபலன்கள் மக்களையும் சென்றடைய வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும். அதனால் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்தி பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் போது அதன் பிரதிபலன்கள் மக்களுக்குக் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதற்கென வலுவான கட்டமைப்பு ஏற்பாடுகள் இன்றியமையாததாகும். அப்போதுதான் பொருளாதார மறுமலர்ச்சியின் பிரதிபலன்கள் மக்களுக்கும் கிடைக்கப்பெறக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# கோலாலம்பூரில் பன்னாட்டு சிறிய மற்றும் குறுந்தொழில் மாநாடு

மலேசிய அரசின் சிறு மற்றும் குறுந்தொழில் அமைச்சகத்தின் அனுசரணையுடன் மலேசிய SME Corp ஆதரவுடன், உலகத் தமிழ் வர்த்தக சங்கமும், மலேசிய இந்திய வர்த்தக தொழிலியல் சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த பன்னாட்டு சிறு மற்றும் குறுந்தொழில் மாநாடு ( International MSME B2B MEET) கோலாலம்பூர் SME Corp பிளாட்டினம் சென்ட்ரலில் ஜுன்27, 28 ஆகிய தினங்களில் நடைபெற்றது.

தொடக்க விழாவில் தொழில் முனைவோர் மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு துணை அமைச்சர் செனட்டர் சரஸ்வதி கந்தசாமி, உலகத் தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் செல்வகுமார், மலேசிய இந்திய வர்த்தக தொழிலியல் சங்கங்ளின் சம்மேளனத் தலைவர் டத்தோ ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் நாராயணசாமி, SME CORP நிறுவனத்தின் துணை தலைமை செயல் அதிகாரியும் அதன் கொள்கை ஒருங்கிணைப்பாளருமான முகமத் ரித்துதின் மதிப் ஆகியோர் கலந்து கொண்டனர்

துணை அமைச்சர் செனட்டர் சரஸ்வதி கந்தசாமி பேசும்போது, இந்த மாநாடு மலேசியா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த சிறு நடுத்தர குறுந்தொழில் முனைவர்களிடையே நல்லதொரு உறவுப் பாலத்தை ஏற்படுத்தி இருப்பதாகவும் மலேசியா மற்றும் இந்தியா மட்டுமின்றி உலகின் பல நாடுகளைச் சேர்ந்த இந்திய தொழில் முனைவர்கள் தங்களுக்கு இடையிலான வர்த்தக நட்புறவை வலுப்படுத்திக் கொள்வதோடு மலேசியாவில் உள்ள சந்தை வாய்ப்புகளை கண்டறிந்து கொள்வதற்கும் இந்த மாநாடு வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

தமிழர்களுக்கு எல்லா உதவிகளையும் மலேசிய அரசாங்கம் செய்யும் என்றும், செல்வகுமார் அவர்களுடைய சீரிய முயற்சியினால் இந்த நிகழ்ச்சி மலேசியாவில் முதலீடு செய்பவர்களுக்கு மற்றும் வர்த்தகம் செய்பவர்களுக்கு புதிய வாசல்களை திறக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்

உலகத் தமிழ் வர்த்தக சங்கத் தலைவர் செல்வகுமார் பேசும்போது உலக MSME தினத்தன்று இந்த மாநாடு நடைபெறுவது மலேசியா மற்றும் உலகில் உள்ள நாடுகளைச் சேர்ந்த தொழில் முனைவர்களிடையே பொருளாதார ஒத்துழைப்புக்கு சிறந்த அடித்தளத்தை ஏற்படுத்தும் என்றும்இந்தியா மற்றும் மலேசிய வர்த்தகர்களுக்கு இடையே சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு பெரும் உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்தார். மைக்கி (MAICCI) எனப்படும் மலேசிய இந்திய வர்த்தக சங்கங்களின் சம்மேளனத் தலைவர் டத்தோ ஸ்ரீ திரு கோபாலகிருஷ்ணன் நாராயணசாமி பேசும் போது, தமது சங்கம் இந்திய தொழில் வர்த்தகர்களுக்கு அனைத்து உதவிகளை செய்யும் என்றும் மேலும் இந்திய மலேசியா பொருளாதாரத்தை அடுத்த கட்டத்திற்கு வளர்க்கும் விதமாக இம்மாநாடு அமையும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மலேசிய வர்த்தக சங்கத்துடன், உலகத் தமிழ் வர்த்தக சங்கமும், பாரத் டிவைன் வர்த்தக சங்கமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டன.

மலேசியா வர்த்தக சங்கத்தின் சார்பாக டத்தோ கோபாலகிருஷ்ணன் நாராயணசாமி, உலக வர்த்தக சங்கத்தின் சார்பாக செல்வகுமார், பாரத் டிவைன் வர்த்தக சங்கத்தின் சார்பாக குமரேசன் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மலேசிய தொழில் முனைவோர் மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு துணை அமைச்சர் செனட்டர் சரஸ்வதி கந்தசாமி முன்னிலையில் கையொப்பமிட்டனர். நிகழ்ச்சியில் இந்திய மலேசிய வர்த்தகர்கள் விவரங்கள் அடங்கிய டிஜிட்டல் டைரியும் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் இந்தியாவிலுள்ள பல்வேறு வர்த்தக சங்கங்கள், மலேசியாவில் உள்ள பல்வேறு மாநில இந்திய வர்த்தக சங்கங்கள், உணவக உரிமையாளர் சங்கங்கள், சிறுதானிய இறக்குமதியாளர் சங்கங்கள், ஆடை உற்பத்தி ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், இந்திய பாரம்பரிய மருத்துவ வகைகளான சித்தா, ஆயுர்வேத, மருந்து வகைகளை இறக்குமதி செய்வோர் சங்கங்களைச் சேர்ந்தோர் கலந்து கொண்டார்கள்.

அன்று மாலை மைக்கி (MAICCI) அமைப்பின் சார்பாக விருந்து அளிக்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மலேசியாவில் உள்ள இந்தியத் தூதர் B.N.ரெட்டி பேசும்போது, ஸ்டார்ட் அப் இந்தியா திட்டத்திற்கு மத்திய அரசு எவ்வளவு ஊக்கத்தை அளிக்கிறதோ அதேபோன்று மலேசியாவிலும் இந்தியர்களுக்கு வர்த்தகம் செய்வதற்கு இந்த மாநாடு வழிவகுக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இவ்விருந்து நிகழ்ச்சியில் வரவேற்புரையாற்றிய மைக்கி சம்மேளனத் தலைவர் டத்தோ கோபாலகிருஷ்ணன் நாராயணசாமி பேசுகையில் இந்தியாவில் இருந்து செல்வகுமார் அவர்களுடைய முயற்சியால் எப்படி ஒரு வர்த்தகர்கள் குழு மலேசியாவிற்கு வந்ததோ, அதேபோன்று மலேசியாவில் உள்ள வர்த்தகர்கள் அடங்கிய குழு விரைவில் டெல்லி மற்றும் சென்னைக்கு செல்லும் என்று தெரிவித்தார்.








# மட்டக்களப்பில் மக்கள் பணிக்காகவே தனது வாழ்வை அர்ப்பணித்தவர் சந்திரா

## சமூகநேயனின் மறைவினால் அன்பர்கள் பெருந்துயர்

## தினகரன் பத்திரிகையின் ஆரம்பகால அபிமானி; செந்தூரம் சஞ்சிகையில் வெளிவந்த மருத்துவக் கட்டுரைகளை நூலாக வெளியிடும் எண்ணம் கொண்டிருந்தவர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரபல சமூக செயற்பாட்டாளரும், மட்டக்களப்பு மாவட்ட விஸ்வகர்ம சம்மேளனத்தின் செயலாளருமான சண்முகம் சந்திராவின் மறைவு சமூகத்திற்கு பெரும் பேரிழப்பாகும் என்று மட்டக்களப்பு மாவட்ட விஸ்வகர்ம சம்மேளனம் கவலை தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு, கோட்டைமுனை தெய்வநெறிக் கழக ஒழுங்கையில் வசித்து வந்த சந்திரா, அண்மையில் பயனியர் வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அகப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இரு வாரங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த சனிக்கிழமை (01) தனது 81 ஆவது வயதில் மரணமானார். அன்னாரின் பூதவுடல் நேற்றுமுன்தினம் கள்ளியங்காடு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

வீதியோரம் நடைபாதையினால் அவர் கொண்டிருந்து போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதியுள்ளது. மோட்டார் சைக்கிளோட்டி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். படுகாயமடைந்த சந்திராவை அங்கிருந்தோர் வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இவ்விபத்து குறித்து விசாரணை செய்த பொலிசார், விபத்தின் தடயங்களை வைத்து 4 நாட்களின் பின்பு மோட்டார் சைக்கிளோட்டியைக் கைது செய்தனர்.

காலஞ்சென்ற சந்திரா தனது சமூகசேவைகள் காரணமாக மட்டக்களப்பில் பிரபலமானவராக விளங்கினார். அவர் ஒரு நடமாடும் நூலகமாகத் திகழ்ந்தார். வாசிப்பும் சமூகசேவையுமே அவரது பிரதான பொழுதுபோக்குகளாக இருந்தன.

புதிதாகப் பதவியேற்ற கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தும், ஆளுநரின் கிழக்கு மாகாண சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தை வரவேற்றும், மட்டக்களப்பில் உள்வாங்க வேண்டிய மரபுரிமைமிக்க இடங்களையும் அவற்றின் மகிமைகளையும் தெளிவுபடுத்தியும் ஆளுநருக்கு அவர் கடிதம் அனுப்பியிருந்தார். அவர் அனுப்பிய கடிதத்திற்கான பதில் அவருக்கு வந்திருந்த போதிலும், அவர் மருத்துவமனையில் சுயநினைவற்ற நிலையில் சிகிச்சை பெற்று வந்ததனால் அவரால் அதை வாசித்து விளங்க முடியாமல் போனது.

தினமும் பத்திரிகைகளில் வரும் தகவல்களை சேகரித்து துறை சார்ந்தவர்களுக்கு அனுப்பி வைப்பது அவரது மேலான பழக்கமாகக் காணப்பட்டது. தினகரன் பத்திரிகையின் அபிமானி அவர். நெடுங்காலம் தொட்டு தினகரனை தவறாமல் வாசித்து வந்தார்.

தினகரன் வாரமஞ்சரியின் இணைப்பான செந்தூரம் பதிப்பில் அக்காலத்தில் வெளிவந்த மருத்துவத் தகவல்களை ஒன்றுசேர்த்து வைத்திருந்தார் அவர். அத்தகவல்களை ஒரு நூலாக வெளியிட வேண்டும் என்னும் திட்டத்தை அவர் கொண்டிருந்தார்.

ஆனால் எண்ணம் நிறைவேற முன்னரே அவர் காலமாகி விட்டார்.

அவர் நிறைய நூல்களை வாசிப்பதனால் ஒரு நடமாடும் நூலகமாகக் காணப்பட்டார். அவர் ஒரு தகவல் பெட்டகமாகக் காணப்பட்டார். பத்திரிகைகளில் வரும் குறைநிறைகளையெல்லாம் பத்திரிகை ஆசிரியர்களுக்கு கடிதத்தில் அனுப்பி வைப்பது அவரது வழக்கம்.

உயர் கல்வி கற்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர் செயற்பட்டார். மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகி கல்வி பயிலும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களுக்கு கிழக்குப் பல்கலைக்கழக மருத்தவ பீடத்தின் ஆலோசனைக்கமைய மட்டக்களப்பு மாவட்ட



விஸ்வகர்ம சம்மேளனத்தின் ஊடாக புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளார்.

அத்துடன் அறநெறிப்பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கிலும், மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் மக்கள் வங்கிக் கிளைகளில் மாணவர்களுக்காக சேமிப்புப் கணக்குகளை ஆரம்பித்து வைத்தார்.

அவர் திருமணம் செய்யாமல் தனியாகவே வாழ்ந்து வந்தார். அரசியல் பேதங்கள் இன்றி அனைத்துக் கட்சிகளின் முக்கிய பிரமுகர்களுடன் நட்புறவை ஏற்படுத்தி மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றுவதில் அயராது பாடுபட்டார்.

கொவிட்19 கொரோனா தொற்று காலத்தில் நோயாளிகளை தனிமைப்படுத்துவதற்கான படுக்கைகள் மற்றும் நுளம்பு வலைகளை கோட்டை முனை ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலய விஸ்வகர்ம மண்டபத்தில் வைத்து மட்டக்களப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளிடம் வழங்கி வைத்து தனது சமூக ஆர்வத்தை வெளிப்படுத்தினார்.

கல்லடி இராமகிருஷ்ணமிஷன், சத்துருக்கொண்டான் ஓசாணம் விஷேட தேவையுடைய மாணவர்கள் இல்லம் மற்றும் தாண்டவன் வெளி வயோதிபர் இல்லம் ஆகியவற்றுடன் தொடர்பை ஏற்படுத்தி அதற்கெல்லாம் நிதி உதவிகளைச் செய்து வந்தார்.

உள்ளூர் கைத்தொழில்களை ஊக்குவித்து வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு உதவுவதும் மற்றும் தவறுகள் செய்வோரை நேருக்குநேர் கண்டிப்பதும் அவரது அவரது சுபாவம் ஆகும். பிரமுகர்களுடனான சந்திப்புகளின் போது மக்களின் பிரச்சினைகள் குறித்து வெளிப்படையாக கேள்விகள் எழுப்புவார்.

ச ட்டவிரோத செயல்கள் மற்றும் சமூகவிரோத குற்றங்களை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டுவதன் காரணமாக பலரின் எதிர்ப்பையும் அவர் சம்பாதித்திருந்தார். பிறருக்கு அநீதி இழைக்காமல் நேர்மையுடன், சமூகப்பிரக்ஞையுடன் வாழ்ந்த அவர் சமூகத்துக்கான முன்னுதாரண புருஷராகவே மட்டக்களப்பு மக்களால் போற்றப்படுகின்றார். எவருக்கும் அடிபணியாமல் நியாயத்தின் பக்கம் நின்று மக்களுக்காகவே வாழ்ந்த சமூகநேயனின் மறைவு அவரது அன்பர்களை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.



**சிவம் பாக்கியநாதன்**
தலைவர்,
மட்டக்களப்பு மாவட்ட விஸ்வகர்ம சம்மேளனம்

# மக்கள் வங்கியின் 62 ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்

*மக்கள் வங்கி, ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக தேசத்திற்குச் சிறப்பினை வழங்கும் மற்றும் சேவையாற்றுவதில் 62 ஆவது ஆண்டு நிறைவை ஜூலை 01 ஆம் திகதி கொண்டாடியது. 14.7 மில்லியனுக்கும் மேலான வாடிக்கையாளர் தளம் மற்றும் ரூபா. 3 ட்ரில்லியனுக்கும் அதிகமான திரட்டிய சொத்துக்கள் ஆகியவற்றுடன், இலங்கையில் பொதுமக்களுக்கு வங்கிச்சேவை கோட்பாட்டை அறிமுகப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியுள்ளது. இன்று மக்கள் வங்கியானது நாட்டின் பெரும்பாலான கிராமப்புறங்களுக்கும் அதிநவீன டிஜிட்டல் வங்கி சேவைகளை வழங்குவதன் மூலம் தனது பொறுப்பை தொடர்ந்து முன்னெடுக்கிறது.*

*இன்று, நாடு முழுவதும் 745 சேவை மையங்கள் மூலமாக தனிநபர்கள் மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு முழு அளவிலான வங்கிச் சேவைகளை வழங்கி வருகிறது.*

*தனது Mahajana Mehewara என்ற வர்த்தக சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் மூலம், கொவிட் 19 நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க பிரதான அரச மருத்துவமனைகளுக்கு ரூபா. 20 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள முக்கிய மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்கு வங்கி தனது ஊழியர்களுடன் சேர்ந்து நிதியளித்துள்ளது.*

*சீமாட்டி ரிட்ஜ்வே மற்றும் காசல் மருத்துவமனைகளுக்கு ரூபா.10 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள அத்தியாவசிய மருத்துவப் பொருட்களை நன்கொடையாக வழங்கியதுடன் பின்தங்கிய பாடசாலைகளுக்கு சூரியமின்சக்தியில் இயங்கும் மின்சாரக் கட்டமைப்புகளை வழங்கியுள்ளது.*



*கூட்டுறவு வணிகம் மற்றும் கிராமிய வங்கிச்சேவை முறைமைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் மக்கள் வங்கி நிறுவப்பட்டது. அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் அமைச்சர் டி.பி. இலங்கரத்னவினால் இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. வின்சென்ட் சுபசிங்க மக்கள் வங்கியின் முதல் தலைவராக இருந்தார்.*

*விவசாயக் கடன்கள், அடகு வைத்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிக் கடன்கள், மகளிர் சேமிப்புக் கணக்குகள், சிறுவர் சேமிப்புக் கணக்குகள் போன்ற பலவற்றை முதன்முதலாக மக்கள் வங்கி நாட்டிற்கு அறிமுகப் படுத்தியுள்ளது.*

*மக்கள் வங்கி தனது டிஜிட்டல் வங்கிச்சேவைத் திட்டத்தை 2015 இல் அறிமுகப்படுத்தியது. அதன் செயற்பாடுகளின் பெரும்பகுதியை உள்ளடக்கிய ஒரு விரிவான டிஜிட்டல் படிமுறை மாற்றத் திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்த நாட்டின் முதல் வங்கி இதுவாகும். இதன் விளைவாக, மக்கள் வங்கி இப்போது அதன் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் உலகத்தரம் வாய்ந்த டிஜிட்டல் வங்கிச்சேவை அனுபவத்தை வழங்குகிறது. மக்கள் வங்கி உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.*

*SLIM Nielsen மக்கள் அபிமான விருதுகள், தேசிய வர்த்தக மேன்மை விருதுகள் மற்றும் LankaPay Technnovation விருதுகள் ஆகியவை வங்கியால் பெறப்பட்ட சில உள்நாட்டு விருது அங்கீகாரங்களாகும். சர்வதேச அளவில், மக்கள் வங்கி தனிநபர் நிதிச் சேவைகளில் Asian Banker Excellence விருது, Asia Money Best Bank விருதுகள், SAFA விருதுகள், Asian Digital Finance Forum விருதுகளைப் பெற்றுள்ளது.*

PEOPLE'S BANK
Pride of the Nation

# அரசியல் ஆசையினால் சினிமாவுக்கு முழுக்கு!

*நடிகர் விஜய் சினிமாவில் இருந்து 2_3 ஆண்டுகள் ஓய்வு எடுக்க இருப்பதாக திடீரென சினிமா வட்டாரத்தில் செய்தி ஒன்று பரவி வருகிறது.*

*ஜூன் 22ஆம் திகதி விஜய் தனது 49 ஆவது பிறந்த நாளை கொண்டாடினார். இந்நிலையில் வெங்கட் பிரபு படத்தில் நடித்து முடித்த பிறகு மூன்று வருடங்கள் விஜய் எந்தப் படத்திலும் நடிக்கமாட்டார் என்று கூறப்படுகிறது.*

*அரசியல் ஆசையில் இருக்கும் விஜய் அதற்கான முதல் படியாக கடந்த மாதம் 234 தொகுதிளிலும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மூன்று பேரை சந்தித்து ஊக்கத்தொகையையும், சான்றிதழையும் வழங்கினார்.*

*அவரது இந்தச் செயற்பாடுகளுக்கும், விஜய் மக்கள் இயக்கம் செய்யும் பிற நலத்திட்ட உதவிகளுக்கும் மக்கள் மத்தியில் மதிப்பு ஏறிக்கொண்டிருக்கிறது.*



*எனவே இப்போதிலிருந்து உழைத்தால்தான் 2026ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் களமிறங்கி குறிப்பிடத்தகுந்த பெயரை பெற முடியும் என விஜய் நினைப்பதாகவும் அதனால் மூன்று வருடங்கள் சினிமாவுக்கு தற்காலிகமாக விடைகொடுக்கலாம் என்ற முடிவில் அவர் இருப்பதாகவும் பரபரப்பாக பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது.*

# கடவுளின் பிரசன்னத்திற்கு மக்களின் இதயங்களை திறப்பதில் பெருமகிழ்ச்சி காணும் திரு அவை

உயிர்வாழ்வதற்கு ஒட்சிசன் தேவைப்படுவது போல திருஅவைக்கு நற்செய்தி அறிவிப்புத் தேவைப்படுகிறது என்றும் கடவுளின் அன்பையும் நற்செய்தியின் மகிழ்ச்சியையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளாமல் திருஅவை வாழ முடியாது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்.



கடந்த வியாழனன்று வத்திகான் புனித பேதுரு பெஸிலிக்காவில் நடைபெற்ற புனித பேதுரு, பவுல் பெருவிழாத் திருப்பலியில் ஆற்றிய மறையுரையின்போது இவ்வாறு தெரிவித்த திருத்தந்தை, இயேசுவைப் பின்பற்றுவதில் சீடர்களாகவும், நற்செய்தியை அறிவிப்பதில் திருத்தூதர்களாகவும் இருங்கள் என்றும் இறைமக்கள் அனைவருடனும் இணைந்து எல்லா இடங்களிலும் நற்செய்தியின் அழகைக் பிரதிபலியுங்கள் என்றும் கேட்டுக்கொண்டார்.

“நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?” (மத் 16:15) என்று இயேசு தன் சீடர்களிடம் எழுப்பிய கேள்விதான் எல்லாவற்றிலும் முக்கியமான மற்றும் தேவையான கேள்வி என்றும் கூறிய திருத்தந்தை, எனக்கு இயேசு யார்? என் வாழ்க்கையில் இயேசு யார்? என்ற இரண்டு கேள்விகளை நமக்குள் நாமே எழுப்ப வேண்டும் என்றும், இந்தக் கேள்விகளுக்கு இவ்விரண்டு திருத்தூதர்களும் எப்படிப் பதிலளித்தார்கள் என்பதைக் குறித்தும் சிந்திக்க அழைப்பு விடுத்தார்.

நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்? என்ற இயேசுவின் கேள்விக்கு, “நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்” என்று கூறிய புனித பேதுருவின் பதில் இயேசுவைப் பின்பற்றுவதில் அடங்கியிருந்தது என்று எடுத்துரைத்த திருத்தந்தை, இயேசுவைப் பின்பற்றி, அவரோடும் அவருக்குப் பின்னாலும் சிலகாலம் நடந்த அபூர்வமான அனுபவத்திற்குப் பிறகுதான் பேதுரு ஆன்மிக முதிர்ச்சியை அடைந்தார் என்றும் இது இறையருளால் நம்பிக்கைகுரிய ஒரு பணியை அவருக்குத் தெளிவுபடுத்தியது என்றும் குறிப்பிட்டார்.

பேதுரு இயேசுவைப் பின்பற்றும்பொருட்டு அவர் எல்லாவற்றையும் விட்டுவிட்டார் என்றும், இதனை அவர் உடனடியாக செய்தார் என்றும் நற்செய்தி கூறுகிறது (மத் 4:20) என உரைத்த திருத்தந்தை, ‘நான் யோசித்துவிட்டு பிறகுக் கூறுகிறேன்’ என்று பேதுரு இயேசுவிடம் கூறவில்லை, எதிர்வரும் நன்மை தீமைகள் குறித்தும் அவர் கணக்கிடவில்லை. மாறாக, அவர் வலைகளை விட்டுவிட்டு அவரை உடனடியாகப் பின்பற்றினார் என்றும் குறிப்பிட்டார்.

பேதுரு ஒரு சீடராக, இயேசுவைப் பின்பற்றுபவராக, அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பவராக, நாளுக்கு நாள் அனைத்தையும் கற்றுக் கொள்ளக்கூடியவராக இருந்தார் என்றும் எடுத்துரைத்த திருத்தந்தை, "நீ என்னைப் பின்தொடர்ந்து வா" (யோவான் 21:22) என்பதுதான் பேதுருவிடம் இயேசு கூறியதாக நற்செய்திகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள இறுதியான வார்த்தைகள் என்றும் சுட்டிக்காட்டினார்.



இயேசுவைப் பின்பற்றுவதன் வழியாக மட்டுமே நாம் ஒவ்வொரு நாளும் அவரை அறிந்து கொள்கிறோம் என்றும் அவருடைய சீடர்களாக, அவருடைய வார்த்தைகளைக் கேட்பதன் வழியாக மட்டுமே நாம் அவருடைய நண்பர்களாகி, மாற்றம் தரும் அவருடைய அன்பை அனுபவிக்கிறோம் என்றும் திருத்தந்தை. தெரிவித்தார்.

பேதுருவின் பதில் அவரை இயேசுவைப் பின்பற்ற அழைத்தது என்றால் பவுலடியாரின் பதில் நற்செய்தியை அறிவிக்க அழைப்புவிடுத்தது என்றும். கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தவேண்டும் என்ற எண்ணமுடன் தமஸ்கு நகர் நோக்கிப் புறப்பட்ட புனித பவுல் இயேசுவால் தடுத்தாட்கொள்ளப்பட்டபோது, அவர் இயேசுவில் மீட்பின் மறையுண்மை நிறைவேறியதைக் கண்டுகொண்டார் என்றும் விளக்கினார்.

கிறிஸ்துவைப் பற்றிய உன்னத அறிவோடு ஒப்பிடுகையில், மனிதர் மற்றும் மதம் குறித்து அவர் பெற்ற முந்தைய அனைத்தையும் குப்பையெனக் கருதினார் (பிலி 3:78) என்று கோடிட்டுக் காட்டிய திருத்தந்தை, புனித பவுலடியார் நிலம் மற்றும் கடல், பெருநகரங்கள் மற்றும் சிறுநகரங்களைக் கடந்து சென்று இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்கும்பொருட்டு அவர் தனது வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்தார் என்றும் உரைத்தார்.

எந்தளவுக்கு அவர் இயேசுவைக் குறித்து அதிகம் அதிகம் போதித்தாரோ அந்தளவுக்கு அவர் கிறிஸ்துவைக் குறித்த அறிவைப் பெற்றுக்கொண்டார் என்றும், மற்றவர்களுக்குக் கிறிஸ்துவின் வார்தைகளை அறிவித்ததன் வழியாக அவர் கடவுள் குறித்த மறைபொருளின் ஆழத்தை அறிந்துகொண்டார் என்றும் உரைத்த திருத்தந்தை, இதனால்தான் "நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு!" (1 கொரி 9:16) என்றும், “கிறிஸ்துவே எனக்கு ஆதாயமே" (பிலி1:21) என்றும் அவரால் கூற முடிந்தது எனவும் கூறினார் திருத்தந்தை.

நாமும் அவ்வாறே, இறைவனைப் பின்பற்றி, தொடர்ந்து பணிவுடன் அவரைத் தேடுவதன் வழியாகத் திருஅவையாக வளர்வது நல்லது என்றும், உலக காரியங்களில் மகிழ்ச்சியைத் தேடாமல், அவ்வுலகில் நற்செய்தியை அறிவிப்பதிலும், கடவுளின் பிரசன்னத்திற்கு மக்களின் இதயங்களைத் திறப்பதிலும் மகிழ்ச்சியைக் காணும் ஒரு திருஅவையாக நாம் மாறுவது மிகவும் நல்லது என்றும் வலியுறுத்தினார்.

**அருட்பணி செல்வராஜ் சூசை மாணிக்கம்**




## கட்டுகஸ்தொட்டை திரு இருதயநாதர் ஆலய திருவிழா



கண்டி கட்டுகஸ்தொட்டை திரு இருதயநாதர் ஆலயத்தில் வருடாந்த திருவிழா கடந்த 25 ஆம் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இரத்தினபுரி மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு கிளிட்டஸ் சந்ரசிறி பெரேரா ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. திருவிழா திருப்பலியில் கண்டி மறை மாவட்டத்தின் குரு முதல்வரும் ஆலயத்தின் பங்குத் தந்தையுமான அருட்திரு எல்வின் பீற்றர் பெர்னாண்டோ அடிகளார் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி நளின்ட் அடிகளாரோடு ஏனைய அருட்தந்தையர்களும் இணைந்து கூட்டுத் திருப்பலியாக திருவிழா திருப்பலியை நிறைவேற்றினர். திருப்பலி மற்றும் திருச்சுரூப பவனியையும் படங்களில் காணலாம்.

படங்கள் உதவி: மத்தியூ ஜேசுதாஸன்

# விருந்தோம்பலும் ஆசீர்வாதமும்

## நற்செய்தி தரும் அரிய படிப்பினை

விருந்தோம்பலைப் பற்றி கடந்த ஞாயிறு நற்செய்தி எமக்கு ஆழமான புரிதலை தருகின்றது.

இந்தியாவிலும், இலங்கையிலும், பயணங்கள் மேற்கொள்ளும் அயல்நாட்டவர், நாம் வழங்கும் வரவேற்பினால் பிரமிப்படைவதைக் காணலாம்.

நமது வரவேற்பையும், விருந்தோம்பலையும் பற்றி அவர்கள் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பியபிறகும் பேசிக்கொண்டிருப்பதை நாம் அறிவோம். நமது கலாச்சாரத்தின் உயிர் நாடியாக விளங்கும் விருந்தோம்பல் பண்பு, அண்மைய ஆண்டுகளில், தேய்ந்து, மறைந்து வருவது, மனதை பாரமாக அழுத்துகிறது.

இத்தகைய ஒரு காலகட்டத்தில் தான் கத்தோலிக்கத் திருச்சபை விருந்தோம்பல் தொடர்பில் சிந்திக்க அழைக்கின்றது. அந்த வகையில் கடந்த ஞாயிறு மறையுரைகள் அதற்கான ஆழமான படிப்பினைகளை நமக்குத் தருகின்றன.

இந்தியப் பாரம்பரியத்தில், விருந்தினருக்கு உயர்ந்த மரியாதை வழங்கப்பட்டது. இவை இந்திய வேத நூல்களில் காணப்படுகின்றன.: "விருந்தினர், கடவுளுக்குச் சமமானவர்". இதையொத்த எண்ணத்தை, 'விருந்தோம்பல்' என்ற பிரிவில் திருவள்ளுவர் இவ்வாறு கூறியுள்ளார்: செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு. அதாவது, நாள் முழுவதும் விருந்தினரை உபசரித்து வழியனுப்பி, அடுத்த விருந்தினரை எதிர்பார்த்து காத்திருப்போர், வானவர் மத்தியில் நல்ல விருந்தினர் ஆவார் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

வானவரின் மத்தியில் விருந்தினர் ஆவது போல், வானவர் என்று தெரியாமலேயே, அவர்களை அழைத்து, விருந்து படைத்த ஆபிரகாமை நாம் விவிலியத்தில் சந்திக்கிறோம். (தொடக்க நூல் 18:18) ஆபிரகாம் பெற்ற இந்த அற்புத அனுபவம், கிறிஸ்தவர்களின் அடிப்படை அனுபவமாக விளங்கவேண்டும் என்று, எபிரேயருக்கு எழுதப்பட்டத் திருமுகம் நமக்கு அறிவுறுத்துகிறது:

எபிரேயருக்கு எழுதிய திருமுகம் 13: 12

சகோதர அன்பில் நிலைத்திருங்கள். அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வான தூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியதுண்டு. வந்திருக்கும் விருந்தினர் வானவராவதும், விருந்தினரை வரவேற்று, உபசரிப்பவர்கள், வானவர் நடுவே விருந்தினராவதும், விருந்தோம்பலின் அழகான விளைவுகள்.

இக்கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கடந்த ஞாயிறு முதல் வாசகமும், நற்செய்தியின் இறுதிப் பகுதியும் அமைந்துள்ளன.

சூனேம் நகரைச் சேர்ந்த பெண்மணி ஒருவர், இறைவாக்கினர் எலிசாவை வரவேற்று, உபசரித்ததை முதல் வாசகம் (2 அரசர் 4:811, 14 16) விபரிக்கின்றது.



உணவு படைப்பதோடு தொடங்கும் இந்த உபசரிப்பு, இறைவாக்கினர் வந்து தங்குவதற்கு உறைவிடம் உருவாக்கித்தரும் முயற்சியாக வளர்கிறது. அதுவும், சூனேம் நகரப் பெண்மணி, இறைவாக்கினருக்கென தன் வீட்டின் மேல்தளத்தில் புதிதாக அறை ஒன்றைக் கட்டி, அதை அவருக்கென ஒதுக்கி வைப்பதை அந்த வாசகம் விபரிக்கிறது. அப்பெண், மாடியில் அறையைக் கட்டி, அதில் இறைவாக்கினரைத் தங்கவைத்ததைக் குறித்து, பரிசுத்த விவிலியத்தின் ஆய்வாளர், அருள்பணி யேசு கருணா பகிர்ந்துகொள்ளும் எண்ணங்கள் அழகானவை:

மாடியறை நிறைவான தனிமையை நமக்கு தருகிறது. தெருவில் போவோர், வருவோர், மாடியறையைத் தட்டுவதில்லை. மாடியறையில் பக்கத்துவீட்டுக்காரர்கள் தொல்லையில்லை. மாடிவீடு நம்மை மேலே உயர்த்தி வைப்பதால், நாம் எல்லோரையும் விட பெரியவர் என்ற பெருமித உணர்வை நமக்குத் தருவதோடு, நம்மைக் கடவுளுக்கும் நெருக்கமாக்குகிறது.

இன்னும் முக்கியமாக, மாடியறைக்கான வழி, வீட்டுக்குள்ளே இருப்பதால், மாடியறைக்கான உரிமை, வீட்டு உரிமையாளர்களுக்கும், மிக நெருக்கமானவர்களுக்கும் தவிர, வேறு யாருக்கும் வழங்கப்படுவதில்லை. இவற்றை ஒருங்கிணைத்துப் பார்க்கும்போது, சூனேம் நகரத்துப் பெண், தன்னிடம் இருந்த மிகச் சிறந்ததை இறைவாக்கினர் எலிசாவுக்குக் கொடுக்கின்றார் என்பதை உணர்கிறோம்.

இத்தகைய விரும்தோம்பலால் உள்ளம் நிறைவடைந்த இறைவாக்கினர் எலிசா, குழந்தைப்பேறு இன்றி தவித்த சூனேம் நகரப் பெண்ணுக்கு குழந்தை வரம் கொடுக்கும் ஆசீரோடு முதல் வாசகம் நிறைவு பெறுகிறது.

விருந்தோம்பல் நிகழும்போது, அதனைத் தருவோரும், பெறுவோரும் ஆசீர்வாதங்களால் நிறைவர் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். ஒருவரை ஏற்றுக்கொள்பவர், வரவேற்று, உபசரிப்பவர், தகுந்த பலனைப் பெறுவார் என்பதை நற்செய்தியில், இயேசு, ஓர் உறுதிமொழியாக வழங்குகிறார்.

நற்செய்தியில் மத்தேயு பத்தாம் அத்தியாயத்தில் இறுதிப் பகுதி. இயேசு, திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்து, பணியாற்ற அனுப்பிய போது, அவர்களுக்கு வழங்கிய அறிவுரைகள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. நோய்களைக் குணமாக்கவும், இறந்தோரை உயிர்பெற்றெழச் செய்யவும், பேய்களை ஓட்டவும் (மத். 10:8) அதிகாரங்களை வழங்கும் சக்தி மிகுந்த சொற்களுடன், இயேசுவின் அறிவுரை ஆரம்பமாகிறது. அதைத் தொடர்ந்து, தன் சீடர்கள் சந்திக்கப்போகும் ஆபத்துக்களைக் குறித்து இயேசு வழங்கும் எச்சரிக்கைகள், இப்பிரிவின் அடுத்த பகுதியாக அமைந்துள்ளது (மத். 10: 1632).

வ/ப ஆனமடுவ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 2023-06-30ஆம் திகதியில் உள்ள முழுமையான வாக்குரிமையுள்ள அங்கத்தவர் பெயர்ப் பட்டியல் (2022-06-30ஆம் திகதி வரை அங்கத்துவ உரிமையுள்ள) மற்றும் 2023-06-30ஆம் திகதியில் உள்ள அங்கத்தவர் பெயர்ப் பட்டியல் 2023-7-11ஆம் திகதி முதல் 2023-07-25ஆம் திகதி வரையில் பின்வரும் இடங்களில் காட்சிப்படுத்தப்படும். இதன் பிரகாரம் அங்கத்துவத்தைப் பெற்றுள்ள அனைவரின் பெயர்கள் அந்த அங்கத்தவர் பெயர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதுடன் அதில் உங்கள் பெயர், அங்கத்துவ இலக்கம், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா எனப் பரீட்சித்துப் பார்த்து அதில் ஏதாவது திருத்தங்கள், மேன்முறையீடுகள் அல்லது எதிர்ப்புகள் உள்ளதாயின் அதுபற்றி எழுத்து மூலம் செயலாளர், வ/ப ஆனமடுவ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஆனமடுவ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். அந்த திருத்தங்கள், மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புகள் ஏதாவது சமர்ப்பிக்கவில்லையானால் அந்த ஆவணம் சரியானது எனக் கவனத்திற் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மேலும் அறிவிக்கப்படுகின்றது.

**அங்கத்துவ பெயர்ப் பட்டியல் காட்சிப்படுத்தப்படும் இடங்கள்**

- மதவக்குளம பிரதேச அங்கத்தவர் பெயர் பட்டியல் மதவக்குளம் கிராமிய வங்கி கிளையில்
- கல்குளிய அங்கத்தவர் பெயர்ப்பட்டியல் கல்குளிய கோப்சிட்டி விற்பனைக் கிளையில்
- கொட்டுகச்சிய 2A மற்றும் புராணகம அங்கத்தவர் பெயர்ப்பட்டியல் கொட்டுகச்சிய கிராமிய வங்கிக் கிளையில்
- ஆண்டிகம பிரதேச அங்கத்தவர் பெயர்ப்பட்டியல் ஆண்டிகம கிராமிய வங்கிக் கிளையில்
- முதலன்குளிய மற்றும் உப்பலவத்த பிரதேச பெயர்ப்பட்டியல் உப்பலவத்த கிராமிய வங்கிக் கிளையில்
- செம்புகுளிய மற்றும் மககும்புக்ககடவல பிரதேச பெயர்ப்பட்டியல் மககும்புக்ககடவல கோப்சிட்டி விற்பனை நிலையத்தில்
- சியம்பலகஸ்ஹேன மற்றும் வடத்த பிரதேச அங்கத்தவர் பெயர்ப்பட்டியல் வடத்த கிராமிய வங்கிக் கிளையில்
- கீவுல மற்றும் கல்குளம எனும் பிரதேச பெயர்ப்பட்டியல் கல்குளம கிராமிய வங்கிக் கிளையில்
- 06 கம்மானய மற்றும் கொயிலாடிகம  பெயர்ப்பட்டியல் கொயிலாடிகம கிராமிய வங்கிக் கிளையில்
- 07 கம்மானய (மெருங்கொட), மகஉஸ்வெவ A, தல்கஸ்வெவ மற்றும் மகஉஸ்வெவ B எனும் பிரதேச பெயர்ப்பட்டியல் மெருங்கொட கிராமிய வங்கிக் கிளையில்
- திவுல்வெவ, வல்பாலுவ, பரமாகந்தகம, தோனிகல, வடிகமங்காவ, கொத்தலகெமியாவ மற்றும் ஆனமடுவ பிரதேச பெயர்ப்பட்டியல் ஆனமடுவ கோப்சிட்டி விற்பனை நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன
- பரனன்கட்டுவ பெயர்ப்பட்டியல் பரனன்கட்டுவ கிராமிய வங்கிக் கிளையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

சங்கத்தின் அனைத்து பிரதேசங்களினதும் அங்கத்தவர் பெயர்ப்பட்டியலின் பிரதி பரீட்சித்துப் பார்ப்பதற்காக சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதற்குப் புறம்பாக www.membercoop.net எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து அங்கத்தவர் பெயர்ப்பட்டியலைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என மேலும் அறிவிக்கப்படுகின்றது.

**செயலாளர்,**
**வ/ப ஆனமடுவ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**ஆனமடுவ.**
**தொ.பே. 0322263225**
**2023-06-29.**

பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA)

# விலைமனுக்கோரல்

## சுத்தப்படுத்தல் சேவை வழங்குதல்

### Bid No. : SLIDA/2/7/P/1122-2023

01. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பெறுகைக் குழு தலைவரினால் கீழே விபரங்கள் தரப்பட்டுள்ள சுத்தப்படுத்தல் சேவைகளுக்காக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| சுத்தப்படுத்தல் சேவை தொடர்பான விபரம் | மனுபாதுகாப்பு பிணை (ரூ) |
|---|---|
| இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் அனைத்து கட்டிடங்களிலும் உட்புற மற்றும் வெளிப்புற சுத்தப்படுத்தல் (மலசலகூட கட்டமைப்பு உட்பட), சூழலை சுத்தப்படுத்தல், பூங்கா அழகுபடுத்தல் மற்றும் பராமரித்தல். | ரூ.100,000.00 மனுப்பாதுகாப்பானது வங்கி பிணை உத்தரவாதமாக அல்லது பண வைப்பு மூலமாக சமர்ப்பிக்க முடியம். |

02. விண்ணப்பிக்கும் நிறுவனம் 100 இற்கு குறையாத சுத்தப்படுத்தல் ஊழியர்கள் மற்றும் சிறந்த நிதி நிலைமையுடைய ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும். அதற்கு சான்றாக ஊழியர் சேமலாப நிதி ஆவணங்கள் மற்றும் கணக்கு அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

03. மீளச்செலுத்தப்படாத ரூ.**3,500/-** கட்டணத்தினை நிறுவகத்தின் சிறாப்பரிடம் காசாக செலுத்தி, நிறுவகத்தின் நிருவாகப் பிரிவில் **2023.07.04** திகதியிலிருந்து **2023.07.17** திகதி வரை வார நாட்களில் **மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணி** வரை மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். வழங்குனர்கள் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக வியாபார கடிதத்தலைப்பிலான எழுத்து மூல விண்ணப்பம் மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்.

04. மனு தொடர்பான முன்மனுக்கூட்டம் **2023.07.07** ஆம் திகதி **மு.ப.9.30** மணிக்கு இல-28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் கூட்டம் நடைபெறும் அறையில் நடைபெறும்.

05. முத்திரையிடப்பட்ட மனுக்களை **2023.07.18** ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு முன்னதாக கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக நிறுவகத்தின் நிருவாகப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனுகோரல் பெட்டியில் நேரடியாக இட முடியும். மனுக்கள் சமர்ப்பிக்கப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "**சுத்தப்படுத்தல் சேவை வழங்குவதற்கான விலை மனுகோரல்**" என குறிப்பிடப்படல் வேண்டும்.

06. பூரணப்படுத்தப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி **2023.07.18** ஆம் திகதி **பி.ப.2.00** மணியாகும். காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் மனுக்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவுற்ற பின்னர் உடனடியாக ஒவ்வொரு மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது உரிமம் பெற்ற பிரதிநிதி சமூகமளித்திருக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு **011-5980271** என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெறுகை அதிகாரி உடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைகள் குழு,**
**இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA),**
**28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07.**
தொலைபேசி :- 011-5980200 தொலைநகல் :- 011-2584406
மின்னஞ்சல் :- mail@slida.gov.lk

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு/ இலங்கை புகையிரத சேவைகள்**
**புகையிரத வினைத்திறனுடனான மேம்படுத்தல் செயற்றிட்டம் (REIP)**
**( Railway Efficiency Improvement Project)**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

| | |
|---|---|
| திகதி | 2023 ஜூலை 04 ஆம் திகதியன்று |
| கடனிலக்கம் மற்றும் தலைப்பு | **ADB Loan No. 3806-SRI** |
| ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | **REIP/ADB/ICB/W/02-2** |

இரத்மலானையில் புகையிரத டீசல் பல எண்ணிக்கையான அலகுகளின் **(DMU)** வேலைத்தளத்தை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல்

விலைமனுக்களின் சமர்ப்பித்தலுக்கான இறுதித் திகதி: 2023 ஓகஸ்ட் 18 ஆம் திகதியன்று

1. புகையிரத வினைத்திறனுடனான மேம்படுத்தல் செயற்றிட்டத்திற்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ஆஅவ) (ADB) கடனொன்றைப் பெற்றுள்ளது. இக்கடனின் பாகமொன்று மேலே பெயர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக பிரயோகப்படுத்தப்படும்.
2. பின்வரும் ஒப்பந்த பொதிக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு/ இலங்கை புகையிரத சேவைகள் (''தொழில் வழங்குநர்'') இப்போது அழைக்கின்றார்.

| IFB No. | ஒப்பந்த தலையங்கம் | அமைவிடம் | கால எல்லை (மாதங்களில்) |
|---|---|---|---|
| REIP/ADB/ICB/W/02-2 | இரத்மலானையில் புகையிரத டீசல் பல எண்ணிக்கையான அலகுகளின் **(DMU)**வேலைத்தளத்தை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் | பிரதான பொறிமுறை பொறியியலாளர் (இடப்பரப்பு) இரத்மலானை | 12 |

3. ஆஅவ இன் வடிவமைத்து-கட்டுதல், தனி கட்ட இரு தபாலுறைகள் விலைமனுக்கோரல் நடைமுறைக்கமைவாக சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. தகுதியுள்ள விலைமனுதாரர் பின்வரும் தகவுத்திறனை பூர்த்தி செய்தல் வேண்டும்.
   (i) விலைமனுதாரரின் தேறிய பெறுமதியின் 50% இற்கு மேலதிகமான தொகையை முடிவுறா வழக்குகள் பிரதிநிதிப்படுத்தல் ஆகாது.
   (ii) விலைமனுதாரரின் கடந்த வருட தேறிய வருமானம் சாதகமாகவிருத்தல் வேண்டும்.
   (iii) கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டவாறு முக்கிய செயற்பாடுகளில் கடந்த 10 வருடங்களில், கடந்த 5 வருடங்களில் நிதியிடல் வளங்கள், நிகரான நிர்மாண அனுபவம் ஆகியவற்றின் வருடாந்த சராசரி நிர்மாண நிதிப்புரள்வு.

| நிதிப்புரள்வில் வருடாந்த ஆகக்குறைந்த சராசரி நிர்மாண நிதிப்புரள்வு | நிதியிடல் வளங்கள் | நிர்மாண ஒப்பந்தங்களின் நிகரான அளவு மற்றும் தன்மை (2.4.1) | முக்கிய செயற்பாடுகளின் நிர்மாண அனுபவம் (2.4.2) |
|---|---|---|---|
| 9 மில்லியன் அஜடொ ($9) | விலைமனுக் கோரல் ஆவணங் களின் 3, 2.3.3 ஆகிய பிரிவுகளில் கூறப் பட்டவாறு | கடந்த பத்து (10) வருடங்களில் சித்திகரமாக அல்லது போதுமானளவு பூர்த்தி செய்யப்பட்ட ஆகக் குறைந்தது 5000 ச.மீ தரைப் பரப்பில் உருக்கு/ கொன்கிறீட் கட்டமைப்புடனான ஆகக் குறைந்தது ஒரு கட்டிடம் அல்லது வேலைத்தள நிர்மாணத்தில் பங்கு பெற்றிருத் தலுடன் விலைமனு தாரரின் பங்குபெறுதலானது 7 மில்லியன் அஜ டொலராகவிருத்தல். | மேலேயுள்ள 2.4.1 இல் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லையில் மேற்கூறப்பட்டதிற்காக அல்லது ஏனைய ஒப்பந்தங்களுக்காக பின்வரும் முக்கிய செயற்பாடுகளில் ஆகக்குறைந்த நிர்மாண அனுபவம்.<br>1) 5000 ச.மீ இற்கு குறையாத தரைப்பரப்பொன்றில் வேலைத்தளமொன்றை வடிவமைத்த அனுபவம்.<br>2) குறிப்பிடப்பட்ட அடித்தள இனத்தின் அனுபவம் (ஆகக் குறைந்தது 2000 ச.மீ)<br>3) Experience in epoxy flooring and power floating concreting at least 500 sq.m. floor area in a single project<br>4) Experience in building construction with installation of overhead crane of at least capacity of 20 ton.<br>5) Experience in installation of at least 200 Kw Solar PV system in a single project.<br>6) Experience in installation of two 200 KVA generators with synchronized panel in a project. |

5. இவ்வேலைகள் பின்வருவனவற்றை அடக்குகின்றது.

**DMU வேலைத்தளத்தின் வரைபடங்களை வடிவமைத்தல் மற்றும் தயாரித்தல் மற்றும் ஏனைய அனைத்து இது தொடர்பான வேலைகள்.**
- பொறியியலாளர்/ தொழில் வழங்குநருக்கான வசதிகளுக்கான ஏற்பாடுகள்.
- உடைத்தல், வேலைத்தள சுத்திகரிப்பு மற்றும் தரை வேலைகள்
- வீதி உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல்
- வேலைத்தள கட்டிடத்தில் தண்டவாளங்களை பதித்தல்
- Supply and installation of Cranes and Solar PV system
- Construction of DMU workshop, Changing Room, Generator Room and Painting Booths
- Relocation of utilities
- வெளியக வேலைகள்

6. மேலதிக தகவலைப் பெறுவதற்காகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிப்பதற்காகவும், தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்ட இணையதளத்தை பார்வையிடுவதுடன் பின்வருபவருடனும் தொடர்பு கொள்ளல் வேண்டும்.
   **செயற்றிட்டப் பணிப்பாளர்,**
   **செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை,**
   **கொழும்பு புறநகர் புகையிரத செயற்றிட்டம்,**
   **இல.: 217, கொட்டா வீதி,**
   **கொழும்பு-08, இலங்கை.**
   தொலைபேசி: 0094-112056240-41 (நீடிப்பு 301)
   தொலைநகல்: 0094-112674354
   மின்னஞ்சல்: **pd@csrp.lk copy to** apdproc@csrp.lk **and** pdcsrplk@gmail.com
   இணையம்: **https://csrp.lk/procurement.php?id=4**
7. ஆங்கிலத்திலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வருவனவற்றை பூர்த்தி செய்தல் வேண்டும்.
   (i) REIP/ADB/ICB/W/02-2 என்ற ஒப்பந்த பொதி இலக்கத்திற்கான விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கான எழுத்து மூலமான கோரிக்கையொன்றை மேலேயுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல்.
   (ii) விலைமனுக்கோரல் ஆவணம் தொடர்பாக மீளளிக்கப்படாத தொகையாக இலங்கைப் பணத்தில் 100,000 ரூபாவை அல்லது 305.00 அஜடொ ஐ ரொக்கப் பணத்தில் அல்லது பத்தரமுல்ல இலங்கை வங்கி 0007040317 என்ற கணக்கிலக்கத்திற்கு ''புகையிரத வினைத்திறனுடான மேம்படுத்தல் செயற்றிட்டம்'' என்ற பெயரில் வழங்கப்பட்ட வங்கி வரைவொன்று.

   2023 ஜூலை 4 ஆம் திகதியிலிருந்து விலைமனுக்களை சமர்ப்பித்தலுக்கான இறுதி திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள 6 ஆம் பந்தியின் கீழுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.
8. விலைமனுதாரர் பின்வருமாறு ஒப்படைத்தல் வேண்டும்.
   (i) இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் அவர்களின் விலைமனுக்களை ஒப்படைத்தல் வேண்டும். 2023 ஓகஸ்ட் 18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

   தலைவர்,
   அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,
   பிரதான கணக்காளர் மே/பா.,
   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,
   7ஆம் மாடி, ''செத்சிறிபாய'', II ஆம் கட்டம், பத்தரமுல்ல, இலங்கை.

   (ii) விலைமனுக்கோரல் ஆவணங்களில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறான தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன். இலகுவில் மாற்றக்கூடிய நாணயத்தில் தேவைப்படும் விலைமனுப்பிணைத் தொகையின் நிகரான தொகையை நிருணயப்படுத்துவதற்கான நோக்கத்திற்காக, விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்கு 28 நாட்களுக்கு முன்னரான திகதியன்று நிலவுவதும் இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்பட்ட விற்பனை மாற்று விகிதமானது பிரயோகப்படுத்தப்படும்.
9. இலங்கை, இரத்மலான, இலங்கை புகையிரத சேவைகள், பிரதான பொறிமுறை பொறியியலாளரின் அலுவலகத்தில் 2023 ஜூலை 25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
10. தொழில்நுட்ப விலைமனுக்கள் இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
11. விலைமனுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் ஆகியன தொடர்பான அனைத்து ஆகுசெலவுகளையும் விலைமனுதாரரே பொறுப்பேற்றல் வேண்டுமென்பதுடன் தொழில் வழங்குநரானவர் விலைமனுக்கோரல் செயற்பாட்டின் நடாத்தல் அல்லது விளைவை பொருட்படுத்தாமல் அவ்வாறான ஆகுசெலவுகளுக்கான பொறுப்பை அல்லது கடப்பாட்டை ஏற்க மாட்டார்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**பிரதான கணக்காளர் மே/பா.,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7 ஆம் மாடி, ''செத்சிறிபாய'', II ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல, இலங்கை.**
**04.07.2023**

# லொத்தர் சீட்டின் விலையில் மாற்றம் பரிசு, விற்பனை முகவர் தரகுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது



திரு. அஜித் குணரத்ன நாரகல தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி அபிவிருத்தி லொத்தர் சபை



புகைப்படத்தில் இடதுபுறமிருந்து விஜித சோமரத்ன (பிரதி பொது முகாமையாளர் – நிதி) அபிவிருத்தி லொத்தர் சபை, சானக தொடங்கொடகே (பிரதி பொது முகாமையாளர் – சந்தைப்படுத்தல்) அபிவிருத்தி லொத்தர் சபை, அனுர இலரத்ன (பொது முகாமையாளர்) அபிவிருத்தி லொத்தர் சபை, அஜித் குணரத்ன நாரகல (தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி) அபிவிருத்தி லொத்தர் சபை, வைத்தியர் சமீர சீ. யாபா அபேவர்தன (தலைவர்), தேசிய லொத்தர் சபை, சட்டத்தரணி ஹசினி இலங்கசேகர (பொது முகாமையாளர்) தேசிய லொத்தர் சபை, கீதா பெரேரா (பிரதி பொது முகாமையாளர்) தேசிய லொத்தர் சபை மற்றும் மெனுர சந்துரங்க – (உதவி பொது முகாமையாளர் – விற்பனை) தேசிய லொத்தர் சபை என்பவர்கள் கலந்துகொண்டனர்.



டாக்டர் சமீர சீ. யாபா அபேவர்தன தலைவர் தேசிய லொத்தர் சபை

தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை என்பவை தமது லொத்தர் சீட்டின் விலைகளை அதிகரித்துள்ளன.

எதிர்வரும் ஜூலை மாதம் ஆறாம் (06)ஆம் திகதி முதல் சகல லொத்தர் சீட்டுகளின் விலை 20.00 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் ஒரு லொத்தர் சீட்டின் புதிய விலை 40.00 ரூபாவாகும்.

இது தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்தும் நோக்கில் நேற்று ஊடக சந்திப்பொன்று நடாத்தப்பட்டது என்பதுடன் அதற்கு அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி அஜித் குணரத்ன நாரகல அவர்கள் தலைமையில் உயர் முகாமையாளர்களும் மற்றும் தேசிய லொத்தர் சபையின் தலைவர் சமீர சீ. யாபா அபேவர்தன அவர்கள் தலைமையில் உயர் முகாமையாளர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் அஜித் குணரத்ன நாரகல அவர்கள் குறிப்பிட்டதாவது,

கடந்த வருடம் பலவிதமாக நிகழ்ந்த கொவிட்-19 உலகத் தொற்றுநோய் நிலைமையினால் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தநிலையின் அழுத்தம், நாட்டினுள் நிலவும் டொலர் நெருக்கடி மற்றும் சமூக, பொருளாதார நெருக்கடியான நிலைமையினால் எமது நாட்டின் வியாபாரம் பெரும் ஆபத்திற்குள்ளானது. அதனால் பெரும்பாலான வியாபாரங்கள் ஸ்தம்பித்தன என்பதுடன், பொருளாதார மந்தநிலையினால் லொத்தர் வியாபாரத்திற்கும் அவ்வாறே பாதிப்பை ஏற்படுத்தியது என்று சொன்னார். இந்த நெருக்கடியினால் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்குத் தேவையான மூலப்பொருட்களின் தட்டுப்பாட்டினால் நாட்டில் குறித்த மூலப்பொருட்களின் விலைகள் வேகமாக உயர்ந்தன என்பதுடன் அதன் காரணமாக லொத்தர் சீட்டுகளை அச்சிடும் கட்டணத்தை அச்சகத்தார்கள் உயர்த்தியதனால் அது இந்த வியாபாரத்திற்கு நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தியது எனவும் குறிப்பிட்டார். இந்த சகல கடினமான நிலைமையில் லொத்தர் வியாபாரத்தை இன்று வரை தொடர்ந்து நடாத்திக் கொண்டு செல்வதற்குத் தேவையான முகாமைத்துவத்தின் பொறுப்புகூறல் குறையாத வகையில் நிறைவேற்றப்பட்டது எனவும் கூறினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த தலைவர் கூறியதாவது,

இவ்வாறான ஒரு நிலைமை 2008ஆம் ஆண்டிலும் எழுந்தது என்பதுடன், அதற்கு லொத்தர் சீட்டுகளின் கிரயக் கட்டமைப்பை கவனத்திற் கொண்டு அதன்மூலம் பெறப்படும் இலாபம், ஜனாதிபதி நிதியத்தையும் மற்றும் மஹபொல புலமைப்பரிசில் நிதியத்தையும் ஊட்டமளிப்பதற்கு போதுமானதாக இருக்கவில்லை என்பதால், லொத்தர் சீட்டின் விலையானது 10.00 ரூபாவிலிருந்து 20.00 ரூபா வரை அதிகரிக்கப்பட்டு, லொத்தர் பரிசுகளின் அளவும் அதிகரிக்கப்பட்டு விற்பனை முகவர்களின் தரகுத் தொகையும் அதிகரிக்கப்பட்டு, சபை அமைக்கப்பட்டதன் நோக்கமான ஜனாதிபதி நிதியம் மற்றும் மஹபொல உயர்கல்வி நிதியம் என்பவற்றை வலுப்படுத்துவதற்கு பங்களிப்பு செய்யப்பட்டது. தற்போது நிலவும் பொருளாதார நிலைமையை கவனத்திற் கொள்ளும்போதும், தற்போது சந்தையில் நிலவும் லொத்தர் செயற்பாட்டுக் கிரயம் சடுதியாக உயர்ந்ததன் காரணத்தினால் சபையின் இலாபத்தன்மை குறைவடைந்ததை நிவர்த்தி செய்வதற்காக, நுகர்வோருக்கு அதிகமான வெற்றி எண்ணிக்கைகளை வழங்குவதற்கும், ஜனாதிபதி நிதியத்திற்கும் மற்றும் மஹபொல உயர்கல்வி நிதியத்திற்கும் அதேபோல் 2500 விற்பனை முகவர்கள், 20,000 விற்பனை உதவியாளர்களுக்கும் அதிக பிரதிபலன்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக, நிதி அமைச்சின் அனுமதியின் பேரில் 2023 ஜூலை மாதம் 06ஆம் திகதி முதல் 20.00 ரூபாவிற்கு விற்கப்பட்ட ஒரு லொத்தர் சீட்டை 40.00 ரூபா வரை அதிகரிக்க அபிவிருத்தி லொத்தர் சபை மற்றும் தேசிய லொத்தர் சபை தீர்மானித்துள்ளது. பதினான்கு வருடங்களுக்குப் பின் மேற்கொள்ளப்படும் இந்த விலை அதிகரிப்பினால், எங்களுடன் கைகோர்த்துள்ள சகல தரப்பினர் அதாவது லொத்தர் சீட்டுகளைக் கொள்வனவு செய்பவர்களுக்கு அதிக வெற்றிகள் மற்றும் வெற்றி வாய்ப்புகளும், விற்பனை முகவர்கள் மற்றும் விநியோக விற்பனை முகவர்களுக்கும் தமது தொழில் கௌரவத்தை மேலோங்கச் செய்து தரகுத் தொகையை 100% அதிகரித்து, ஜனாதிபதி நிதியத்திற்கும் மற்றும் மஹபொல உயர்கல்வி நிதியத்திற்கு நிதியையும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வரிகளையும் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக நாட்டின் தேசிய வருமானத்திற்கு செய்யும் பங்களிப்பை அதிகரிப்பதும் அபிவிருத்தி லொத்தர் சபையின் எதிர்பார்ப்பாகும்.

இங்கு தேசிய லொத்தர் சபையின் தலைவர் சமீர சீ யாபா அபேகுணவர்தன அவர்கள் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது,

"1964ஆம் வருடத்தில் தேசிய லொத்தர் சபையானது 50 சதத்திற்கு லொத்தர் சீட்டு விற்பனையை ஆரம்பித்தது என்பதுடன் அது படிப்படியாக 1.00 ரூபா, 2.00 ரூபா என உயர்ந்து, 5.00 ரூபாவாகியதன் பின், 1989ஆம் ஆண்டு 10.00 ரூபாவிற்கு உயர்ந்தது. பின்னர் 2008ஆம் ஆண்டு 20.00 ரூபா வரை விலை உயர்த்தப்பட்டது.

தேசிய லொத்தர் சபை அரசாங்கத்திற்கு நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் நிதியை வழங்கும் நிறுவனமாகும் என்பதுடன் இதனூடாக நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது. சுகாதாரம், கல்வி, கமத்தொழில், விளையாட்டுத்துறை இளைஞர் விவகாரங்கள், படைவீரர், சமூக சேவை மற்றும் நலன்புரி மற்றும் தொழிலாளர் போன்ற பல துறைகளின் செயற்பாடுகளுக்கு பாரிய சக்தியை வழங்கும் இயலுமை கிடைத்தது.

இங்கு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த தலைவர்கள் தெரிவித்ததாவது விலை அதிகரிப்பானது விற்பனை முகவர்கள் மற்றும் நிதி அமைச்சுடன் நடாத்திய பல கலந்துரையாடல்களின் பின்னரே மேற்கொள்ளப்பட்டுள்ளது. எந்தவொரு திட்டத்தையும் எதிர்ப்பதற்கு ஒரு சிறு தொகையினர் இருக்கின்றனர் எனவும் இந்த விலை அதிகரிப்பின் ஊடாக விற்பனை வலையமைப்பிற்கும், நாடு மற்றும் சமூகத்திற்குக் கிடைக்கும் பிரதிபலன்கள் தொடர்பில் விசாரித்துப் பார்த்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்தனர்.

படம் - சுதத் நிசாந்த

> விலையை 40.00 ரூபாவினால் அதிகரிப்பதனால் உங்களுக்குக் கிடைக்கும் நன்மைகள்.
>
> மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியத்தை வலுப்படுத்துதல்.
>
> ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக தீவிர நோய்களைக் கொண்ட இருதய நோயாளர்கள் மற்றும் சிக்கலான சத்திரசிகிச்சைக்காக நிதியுதவி வழங்குதல்
>
> கல்வி, சுகாதாரம், கலை மற்றும் கலாசாரம் போன்ற பல்வேறு சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பங்களித்தல்
>
> நாடெங்கிலுமுள்ள விற்பனை முகவர்கள், விற்பனை உதவியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வாழ்வாதார நிலைமையை உயர்த்துதல்.

## பொதுசன கருத்துகளுக்கான இலங்கை கட்டளைகள் வரைவு

1. கட்டிட வேலைகளை அளவிடுவதற்கான இலங்கை கட்டளை முறை வரைவு
   SLS 573: 2023 (இரண்டாவது மீளாய்வு)
2. டிஜிட்டல் மனித வளங்கள் மற்றும் மனித வளங்கள் பகுப்பாய்வுக்கான இலங்கை கட்டளை வழிகாட்டல் வரைவு
   SLS XXXX: 2023
3. மனித வளங்கள் முகாமைத்துவ – சொல்லகராதிக்கான இலங்கை கட்டளை வரைவு
   SLS XXXX: 2023
   (ISO 30400:2022)
4. ஊழியர் வளம் மற்றும் பணி அமர்த்தலுக்கான இலங்கை கட்டளை வழிகாட்டல் வரைவு
   SLS XXXX: 2023
5. வெகுமதி முகாமைத்துவத்துக்கான இலங்கை கட்டளை வழிகாட்டல் வரைவு
   SLS XXXX: 2023
6. கற்றல் மற்றும் மேம்பாட்டுக்கான இலங்கை கட்டளை வழிகாட்டல் வரைவு
   SLS XXXX: 2023
7. ஏற்பாட்டியல் வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான இலங்கை கட்டளை வழிகாட்டல் வரைவு
   SLS XXXX: 2023
8. செயல்திறன் முகாமைத்துவத்திற்கான இலங்கை கட்டளை வழிகாட்டல் வரைவு
   SLS XXXX: 2023
9. மனித வளங்கள் கணக்கியல் மற்றும் மனித மூலதனத்திற்கான இலங்கை கட்டளை வழிகாட்டல் வரைவு
   SLS XXXX: 2023
10. மனித வளங்கள் முகாமைத்துவ சூழலில் ஊழியர் உறவுகள் மற்றும் தொழில்துறை உறவுகளுக்கான இலங்கை கட்டளை வழிகாட்டல் வரைவு
    SLS XXXX: 2023
11. மனித வள கணக்காய்வுக்கான இலங்கை கட்டளை வழிகாட்டல் வரைவு
    SLS XXXX: 2023
12. மூலோபாய தொழில்படை திட்டமிடலுக்கான இலங்கை கட்டளை வழிகாட்டல் வரைவு
    SLS XXXX: 2023
13. திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு (எல்பிஜி) சிலிண்டருடன் பயன்படுத்துவதற்கான வால்வு பொருத்துதல்களுக்கான இலங்கை கட்டளை விபரக்குறிப்பு வரைவு
    SLS 1184: 2023
14. மின்சார மோட்டார் இயக்கப்படும் மையவிலக்கு நீர் பம்பிகளுக்கான ஆற்றல் திறன் மதிப்பீட்டுக்கான இலங்கை கட்டளை விபரக்குறிப்பு வரைவு
    SLS XXXX: 2023

மேலுள்ள கட்டளைகள் வரைவில் பொதுசனங்கள் மற்றும் ஏனைய ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து இலங்கை கட்டளைகள் நிறுவனம் கருத்துகளை கோருகிறது.

இந்த கட்டளைகள் வரைவு இறுதி செய்யப்படுவதற்கு முன் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் தொடர்புடைய குழுக்கள் மூலம் கிடைக்கப்பெறும் கருத்துகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

மேல் குறிப்பிடப்பட்ட இலக்கம் 03 தவிர்த்து மற்றைய வரைவுகளை தேவையானவர்களுக்கு இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆவணங்கள் மற்றும் தகவல் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு www.slsi.lk என்ற இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும். மேலுள்ள இலக்கம் 03 வரைவை இந்த நிறுவனத்தின் நூலகத்தில் கொள்வனவு செய்ய முடியும்.

2023-08-30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கருத்துகள் எனக்கு கிடைக்கப்பெறுதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை கட்டளைகள் நிறுவனம்,
இல. 17, விக்டோரியா பிளேஸ்,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08
தொலைபேசி: 011 – 2671567 – 72,
மின்னஞ்சல்: dg@slsi.lk,
இணையதளம்: www.slsi.lk

**இலங்கை கட்டளைகள் நிறுவனம்**
**தொழில்நுட்ப அமைச்சு**

## மக்கள் வங்கி கம்பஹா பிராந்திய தலைமைக் காரியாலயம்
## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.03.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஒவ்வொரு கிளையின் முன்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

| ஏல விற்பனை நிகழும் திகதி | 22.07.2023 மற்றும் 23.07.2023 | | | | |
|---|---|---|---|---|---|
| இந்த திகதி வரை மீட்கப்படாத/ புதுப்பிக்கப்படாத நகைகள் | 21.07.2023 | | | | |
| ஏல விற்பனை நிகழும் கிளைகளின் பெயர் | தெல்கொட | நிட்டம்புவ | கம்பஹா | மீரிகம | மினுவாங்கொட |
| அடகு வைக்கப்பட்ட கிளைகளின் பெயர் | மல்வான<br>பூகொட<br>தெல்கொட | நிட்டம்புவ<br>வேயங்கொடை | கம்பஹா<br>யக்கல<br>கிரிந்திவெல | மரந்த கஹமுல<br>மீரிகம | மினுவாங்கொட<br>கட்டுநாயக்க<br>சீதுவ |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்களின் பெயர் | தோம்பே<br>வெலிவேரிய | திஹாரிய<br>பஸ்யால<br>வத்துப்பிட்டிவல<br>நயிவல | ஜா-எல வீதி<br>உடுகம்பொல<br>முதுங்கொட<br>ஊறாபொல | திவுலபிட்டிய<br>தேமன்ஹந்திய<br>பல்லேவெல<br>கொட்டதெனியாவ | ஆண்டிஅம்பலம்<br>அவரியவத்த<br>ரத்தொளுகம |

| ஏல விற்பனை நிகழும் தேதி | 29.07.2023 மற்றும் 30.07.2023 | | | |
|---|---|---|---|---|
| இந்த தேதி வரை மீட்கப்படாத/ புதுப்பிக்கப்படாத நகைகள் | 28.07.2023 | | | |
| ஏல விற்பனை நிகழும் கிளைகளின் பெயர் | நீர்கொழும்பு | ஜா-எல | றாகம | கிரிபத்கொட |
| அடகு வைக்கப்பட்ட கிளைகளின் பெயர் | நீர்கொழும்பு<br>கொச்சிக்கடை | ஜா-எல<br>வத்தளை<br>பமுனுகம<br>கந்தானை | றாகம<br>கணேமுல்ல<br>கடவத்தை | மஹர<br>களனி<br>கிரிபத்கொட |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்களின் பெயர் | பிரதான வீதி, கட்டான,<br>பிட்டிபன மீன்பிடி<br>மையம் | தெஹியகந்த<br>ஏக்கல, எலக்கந்த<br>வெலிசர | மஹபாகே<br>பட்டுவத்த<br>வெலிப்பில்லாவ<br>கிரில்லவல<br>கடவத்த நகரம் | எந்தரமுல்ல<br>மாவரமண்டிய<br>சிங்காரமுல்ல<br>பேலியகொட |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி, பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**கம்பஹா- தொலைபேசி இல.033 2223880**

PEOPLE'S BANK
Pride of the Nation

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

### மக்கள் வங்கி பிராந்திய தலைமைக் காரியாலயம், அநுராதபுரம்

மக்கள் வங்கி அநுராதபுர பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் 31.03.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள திகதி வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் பின்வரும் திகதிகள் மற்றும் இடங்களில் பொது ஏலத்தில் விற்கப்படும்.

**ஒவ்வொரு நாளும் ஏல விற்பனையானது காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.**

| ஏல விற்பனை நிகழும் திகதி | 22.07.2023 | 23.07.2023 | 29.07.2023 | 30.07.2023 |
|---|---|---|---|---|
| இந்த திகதி வரை மீட்கப்படாத/ புதுப்பிக்கபடாத நகைகள் | 21.07.2023 | 21.07.2023 | 28.07.2023 | 28.07.2023 |
| ஏல விற்பனை நிகழும்/ இடம் | அநுராதபுரம் | கெக்கிராவ | அநு/நுவரவெவ | மதவாச்சி, |
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | அநுராதபுரம்,<br>தம்புத்தேகம | கெக்கிராவ<br>கல்கிரியாகம,<br>கலென்பிந்துனுவெவ,<br>கல்னேவ | அநு/நுவரவெவ<br>எப்பாவல,<br>நொச்சியாகம,<br>தலாவ, மீகலேவா | மதவாச்சி,<br>கஹடகஸ்திகிலிய,<br>ஹொரொவ்பொத்தான,<br>பதவியா,<br>கெபிதிகொல்லாவ |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | அநுராதபுரம்,<br>ரபீவ,<br>நச்சதுவ,<br>தம்சோபுர,<br>ரஜின ஹந்திய,<br>ராஜங்கனய | கணேவல்பொல,<br>மரதன்கடவல,<br>புல்னேவ | வில்லாச்சிய,<br>திறப்பனே,<br>மிஹிந்தல,<br>சாலியவெவ | பதவி - பராக்கிரமபுர,<br>பதவி - ஸ்ரீபுர |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**அநுராதபுரம்**
**தொலைபேசி இல. 025-2223035 / 025-2234870**

PEOPLE'S BANK
Pride of the Nation

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

Gayani - 077 7 278 948 / 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361



அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள சர்வதேச பாடசாலைகள் வலைப்பந்தாட்ட போட்டியில் இலங்கை அணி சார்பாக தெரிவு செய்யப்பட்டுள்ள கொழும்பு சைவ மங்கையர் கல்லூரி மாணவி சந்தோஷி ரஜீவ் கார்த்திகனை பாராட்டும் நிகழ்வு கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படத்தினை காணலாம்.

(படம்: அஷ்ரப் ஏ சமத்)

# இலங்கை அணியின் உலக கிண்ண அட்டவணை உறுதி



உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற்றிருக்கும் இலங்கை அணி உலகக் கிண்ணத்தில் தனது முதல் போட்டியில் வரும் ஒக்டோபர் 7 ஆம் திகதி தென்னாபிரிக்காவை எதிர்கொள்ளவுள்ளது.

சிம்பாப்வேயில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் பங்கேற்றுள்ள இலங்கை அணி இதுவரை ஆடிய அனைத்துப் போட்டிகளிலும் வெற்றியீட்டி முதல் அணியாக உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் இலங்கை அணிக்கு மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான மற்றுமொரு சுப்பர் சிக்ஸ் போட்டி மற்றும் வரும் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெறவுள்ள இறுதிப் போட்டி எஞ்சி இருந்தபோதும் அந்த அணி உலகக் கிண்ணத்தில் ஆடவுள்ள போட்டி அட்டவணை உறுதி செய்யப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகளே உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறும் என்ற நிலையில் அதில் இலங்கை தகுதி பெறும் நிலையில் 'தகுதி 2' நிலையிலேயே உலகக் கிண்ணத்தில் ஆடும்.

ஏற்கனவே மேற்கிந்திய தீவுகள் உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற தவறி இருக்கும் நிலையில் இரண்டாவது அணியாக தகுதி பெறுவதற்கு சிம்பாப்வே மற்றும் ஸ்கொட்லாந்து அணிகளுக்கு இடையே போட்டி நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை உலகக் கிண்ணத்தில் பத்து அணிகளே பங்கேற்றிருக்கும் நிலையில் ரவுன்ட் ரொபின் அடிப்படையில் ஒவ்வொரு அணியும் மற்ற ஒன்பது அணிகளுடன் ஆரம்ப சுற்றில் மோதும். இதில் முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதிபெறும். உலகக் கிண்ண இறுதிப் போட்டி நவம்பர் 19 ஆம் திகதி அஹமதாபாத்தில் நடைபெறவுள்ளது.

| இலங்கை அணியின் போட்டி அட்டவணை |
|---|
| எதிர் தென்னாபிரிக்கா, டெல்லி, ஒக்டோபர் 07 |
| எதிர் பாகிஸ்தான், ஹைதராபாத், ஒக்டோபர் 12 |
| எதிர் அவுஸ்திரேலியா, லக்னோவ், ஒக்டோபர் 16 |
| எதிர் தகுதி 1, லக்னோவ், ஒக்டோபர் 21 |
| எதிர் இங்கிலாந்து, பெங்களூர், ஒக்டோபர் 26 |
| எதிர் ஆப்கானிஸ்தான், பூனே, ஒக்டோபர் 30 |
| எதிர் இந்தியா, மும்பை, நவம்பர் 02 |
| எதிர் பங்களாதேஷ், டெல்லி, நவம்பர் 06 |
| எதிர் நியூசிலாந்து, பெங்களூர், நவம்பர் 09 |

உலகக் கிண்ண ஆரம்பப் போட்டி ஒக்டோபர் 05 ஆம் திகதி இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையே அஹமதாபாத்தில் நடைபெறவுள்ளது.

இதில் டெல்லியில் முதல் போட்டியில் ஆடும் இலங்கை தொடர்ந்து ஹைதராபாத் செல்லவுள்ளது. இந்நிலையில் லக்னோவில் இரண்டு போட்டிகளுக்காக தங்கியிருக்கும் இலங்கை அணியினர் பின்னர் பெங்களூர் மற்றும் பூனேவில் மற்ற இரண்டு போட்டிகளிலும் ஆடும். தொடர்ந்து போட்டியை நடத்தும் இந்தியாவுக்கு எதிராக மும்பையில் வரும் நவம்பர் 2 ஆம் திகதி பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

இந்நிலையில் டெல்லிக்கு திரும்பும் இலங்கை அணி தனது கடைசி ரவுன்ட் ரொபின் சுற்றுப் போட்டியில் நியூசிலாந்து அணியை நவம்பர் 9 ஆம் திகதி பெங்களூரில் எதிர்கொள்ளவுள்ளது.

# யங் ஸ்டார் சம்பியன்



அக்கரைப்பற்று ஏஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் அக்கரைப்பற்று உதைபந்தாட்ட சம்மேளனம் நடாத்திய 'கோல் காப்பாளர் மர்ஹூம் என். ரீ. பாறுக் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண' உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஏறாவூர் யங் ஸ்டார் விளையாட்டு கழகம் சம்பியனானது.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த 16 முன்னனி உதைபந்தாட்ட அணிகள் கலந்து கொண்ட இத்தொடரின் இறுதிப்போட்டி அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (30) நடைபெற்றது. இதில் அக்கரைப்பற்று சூ சுற்றி அணியை எதிர்கொண்ட யங் ஸ்டார் கழகம் 5–1 என்ற கோல் கணக்கில இலகு வெற்றியீட்டியது. இத்தொடரின் சிறந்த வீரராக யங் ஸ்டார் அணியின் முஹம்மட் முஸ்தாக் தெரிவு செய்யப்பட்டார்.

# கிரிக்கெட், கராத்தேவில் கிழக்கு மாகாணம் தங்கம்

கிண்ணியா மத்திய நிருபர்





47 ஆவது தேசிய விளையாட்டு விழாவில், கிரிக்கெட் மற்றும் கராத்தே போட்டிகளில் கிழக்கு மாகாணம் தங்கப்பதக்கம் வென்றுள்ளது.

தேசிய விளையாட்டு விழாவின் கிரிக்கெட் போட்டிகள் எம்பிலிப்பிட்டிய மகாவெலி விளையாட்டு அரங்கிலும், கராத்தே போட்டிகள் சுகததாச உள்ளக அரங்கிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (2) நடைபெற்றது. இதில் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் தங்கப் பதக்கத்தையும் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்த கிழக்கு மாகாண அணியினர், கராத்தே போட்டியில் ஒரு தங்கப் பதக்கம் ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் ஒரு வெண்கல பதக்கம் உட்பட மொத்தமாக ஐந்து பதக்கங்களை வென்றது.

# ஜாவாலேன், கொழும்பு வெற்றி



சிட்டி லீக்தலைவர்கிண்ணகால்பந்து தொடரில் மொரகஸ்முல்ல விளையாட்டுக் கழகம் மற்றும் ஜாவாலேன் இடையிலான போட்டியில் 4–2 என்ற கோல் கணக்கில் ஜாவாலேன் வெற்றியீட்டியது. அதேபோன்று மாளிகாவத்தை யூத் மற்றும் கொழும்பு கால்பந்து கழகத்திற்கு இடையிலான போட்டியில் 3–1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டுவதற்கு கொழும்பு அணியால் முடிந்தது.

கொழும்பு சிட்டி லீக் மைதானத்தில் நேற்று முன்தினம் (02) நடைபெற்ற மொரகஸ்முல்ல மற்றும் ஜாவாலேன் இடையிலான போட்டியின் முதல் பாதி ஆட்டம் 1–1 என சமநிலை பெற்றிருந்தபோதும் இரண்டாவது பாதியில் ஜாவாலேன் அணி ஆதிக்கம் செலுத்தியது.

போட்டியின் 4ஆவது நிமிடத்தில் மொஹமட் சப்ரான் ஜாவாலேன் அணிக்கு முதல் கோலை பெற்றதோடு டிலான் மதுசங்க பதில் கோல் திருப்பினார். மீண்டும் செயற்பட்ட சப்ராஸ் 46 ஆவது நிமிடத்தில் கோல் புகுத்தியதோடு மொஹமட் ரிஸ்கான் 58ஆவது நிமிடத்திலும் மதுரங்க சில்வா 76ஆவது நிமிடத்திலும் ஜாவாலேன் கோல் எண்ணிக்கையை அதிகரித்தனர்.

கடும் போட்டிக்கு மத்தியில் 78 ஆவது நிமிடத்தில் நிமல தனஞ்சய மொரகஸ்முல்ல கழகத்திற்காக இரண்டாவது கோலை புகுத்தினர். மாளிகாவத்தை யூத் மற்றும் கொழும்பு கால்பந்து கழகத்திற்கு இடையிலான போட்டியில் சப்ரான் செட்டர் கொழும்பு அணிக்காக 15 ஆவது நிமிடத்தில் கோல் புகுத்த 34 ஆவது நிமிடத்தில் மொஹமட் அஸாம் பதில் கோல் திருப்பினார்.

எனினும் இரண்டாவது பாதியில் செயற்பட்ட கொழும்பு அணி 61 ஆவது நிமிடத்தில் மொஹமட் அகீப் மூலமும் 90 ஆவது நிமிடத்தில் நிரான் கனிஷ் மூலமும் கோல் புகுத்தி வெற்றியை உறுதி செய்தது.

சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு 150,000 ரூபா மற்றும் இரண்டாம் இடம் பெறும் அணிக்கு 100,000 ரூபா பரிசு அளிக்கப்படவிருப்பதோடு, இந்த கால்பந்து லீக்கின் தலைவர் ஆர். புவனேந்திரன் தனது தனிப்பட்ட நிதியில் அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை மகளிர் தொடர் வெற்றி

சாமரி அத்தபத்துவின் அபார துடுப்பாட்டத்தின் மூலம் நியூசிலாந்து மகளிர் அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் போட்டியில் 8 விக்கெட்டுகளால் டக்வர்த் லுவிஸ் முறையில் வெற்றியீட்டிய இலங்கை மகளிர் அணி இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரையும் 2–1 என கைப்பற்றியது.

காலியில் நேற்று நடைபெற்ற இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து மகளிர் அணி 31 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 127 ஓட்டங்களை பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டதால் போட்டியை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது.

இதன்போது நியூசிலாந்து அணி சார்பாக ஆரம்ப வீராங்கனை சுசி பேட்ஸ் ஆட்டமிழக்காது 63 ஓட்டங்களை பெற்றார்.

ஆட்டம் மழையால் தாமதம் அடைந்ததால் டகவ்ர்த் லுவிஸ் முறையில் இலங்கை அணிக்கு 29 ஓவர்களில் 196 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை நோக்கி பதிலெடுத்தாட களமிறங்கிய இலங்கை மகளிர் அணி 6 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

எனினும் ஆரம்ப வீராங்கனையான அணித்தலைவி சாமரி அத்தபத்து 3ஆவது விக்கெட்டுக்காக நிலக்ஷி டி சில்வாவுடன் இணைந்து இலங்கை அணியை வெற்றி வரை அழைத்துச் சென்றார்.

இருவரும் பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 190 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர். இதன்மூலம் இலங்கை மகளிர் அணி 26.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 196 ஓட்டங்களை எட்டியது. அபாரமாக துடுப்பெடுத்தாடிய சாமரி அத்தபத்து 80 பந்துகளில் 13 பௌண்டரிகள் மற்றும் 9 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 140 ஓட்டங்களை பெற்றார்.

அவர் இந்தத் தொடரின் முதல் ஒருநாள் போட்டியிலும் சதம் பெற்று இலங்கையை வெற்றிபெறச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது

நிலக்ஷி டி சில்வா 68 பந்துகளில் ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களை பெற்றார்.

இலங்கை மற்றும் நியூசிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடர் வரும் ஜூலை 7ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.




# பிரான்ஸில் அமைதியை ஏற்படுத்த கடும் முயற்சி



வன்முறைகள் வெடித்துள்ள பிரான்ஸில் அமைதியைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன.

17 வயது இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து அங்கு ஒரு வாரமாக ஆர்ப்பாட்டங்கள் நீடிக்கின்றன. வன்முறைகளை நிறுத்துமாறு உயிரிழந்த இளைஞரின் பாட்டி ஆர்ப்பாட்டக்காரர்களைக் கேட்டுக்கொண்டார்.

பிரான்ஸில் அமைதியை நிலைநாட்டுவதற்கு இயன்ற அனைத்து முயற்சிகளையும் எடுக்குமாறு பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவல் மக்ரோன் தமது அமைச்சரவையிடம் கூறியுள்ளார்.

அவர் பாராளுமன்றத் தலைவர்களையும் ஆர்ப்பாட்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ள நகரங்களின் 220க்கும் அதிகமான மேயர்களையும் சந்திக்கவுள்ளார்.

கடந்த ஞாயிறு (02) இரவு மக்ரோன் அவசரப் பாதுகாப்புக் கூட்டத்தை நடத்தினார். நாட்டின் கொந்தளிப்பான சூழலைக் கையாள வேண்டியிருப்பதால் அவர் ஜெர்மனிக்கான தமது உத்தியோகபூர்வ பயணத்தை ஒத்திவைத்துள்ளார். இந்த வன்முறையில் கடைகள் தாக்கப்பட்டும் சூறையாடப்பட்டும் இருப்பதோடு கார்கள் மற்றும் பஸ் வண்டிகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. வன்முறையை கட்டுப்படுத்த நாடு முழுவதும் 45,000 பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் தொடர்ந்து வன்முறை நீடிக்கும் சூழலில் கடந்த ஞாயிற்றுக் கிழமையும் பாரிஸ் புறநகர் பகுதிகளில் 78 பேர் கைது செய்யப்பட்டதோடு நேற்று அதிகாலை மேலும் 20 பேர் கைதாகியுள்ளனர்.

வன்முறைகளின் உச்சமாகக் கடந்த சனிக்கிழமை (1) பாரிஸ் புறநகரின் மேயர் வீட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் காரால் மோதினர். அந்த வீட்டில் உள்ளவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோதுசிலர்வீட்டுக்குத் தீ வைத்தனர்.

## சர்வதேச செய்திகள்

# ஜெனின் அகதி முகாமில் இஸ்ரேல் வான் தாக்குதல்: 8 பலஸ்தீனர் பலி

## நகரில் பாரிய சுற்றிவளைப்பு தேடுதல்



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை நகரான ஜெனினில் இஸ்ரேல் இராணுவம் நேற்று (03) அதிகாலை நடத்திய பாரிய சுற்றிவளைப்பு மற்றும் வான் தாக்குதல்களில் எட்டு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த சிலர் ஆபத்தான நிலையில் இருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் இஸ்ரேலிய போர் விமானங்கள் வீடு ஒன்றை இலக்கு வைத்து மூன்று ஏவுகணைகளை வீசி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன்போது குறைந்தது 10 வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வான் தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேலிய இராணுவம் ஜெனின் அகதி முகாமை முடக்கி, ஆயுதம் ஏந்திய இராணுவ புல்டோசர்களின் உதவியோடு சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்தியுள்ளது.

இதன்போது அல் அக்ஸா தியாகப் படை தளபதிகளில் ஒருவரான சகரியா எஸ்செபிதியின் குடும்பத்திற்கு சொந்தமான வீட்டை இஸ்ரேலிய இராணுவம் முற்றுகையிட்டுள்ளது.

இதன்போது இஸ்ரேலிய போர் விமானங்கள் கணிசமான நேரம் அந்த முகாமில் வான் தாக்குதல்களை நடத்தியதாக பார்த்தவர்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

பிறிதொரு சம்பவத்தில் மேற்குக் கரை நகரான ரமல்லாவுக்கு அருகில் இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டில் 21 வயது பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மேற்குக் கரையில் வன்முறை அதிகரித்திருக்கும் சூழலிலேயே நேற்றைய தாக்குதல் இடம்பெற்றுள்ளது. ஜெனின் அகதி முகாமில் அண்மையில் 2006 ஆம் ஆண்டுக்கு பின் இஸ்ரேல் ஆளில்லா விமான தாக்குதல் நடத்தியதோடு இந்த முகாமில் இஸ்ரேலின் சுற்றுவளைப்பு தேடுதல்கள் அதிரித்து, பலஸ்தீன கிராமங்கள் மீதான இஸ்ரேலிய குடியேறிகளின் தாக்குதல்களும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிலிப்பைன்ஸுடன் இந்தியா ஒத்துழைப்பு



விஞ்ஞானம், தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல துறைகளில் ஒத்துழைப்புடன் செயற்படுவது குறித்து இந்தியாவும் பிலிப்பைன்ஸும் கவனம் செலுத்தியுள்ளன. இரு தரப்பு ஒத்துழைப்புக்கான இந்திய மற்றும் பிலிப்பைன்ஸ் கூட்டு ஆணைக் குழுவின் கூட்டத்தின் போது இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக்கூட்டு ஆணைக்குழுவின் கூட்டம் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், பிலிப்பைன்ஸ் வெளிவிவகார செயலாளர் என்ரிக் மனலோ ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் தூதரக ரீதியிலான இராஜதந்திர உறவு ஆரம்பிக்கப்பட்டு 75 ஆவது வருட நிறைவு கொண்டாடப்படும் இச்சூழலில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பல துறைகளில் ஒத்துழைப்புடன் செயற்படுவது குறித்து இரு தரப்பினரும் கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூலை மாதம் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.